**க.து.ந.க.எண்:தொ.ப.நி./ 035 / 2008**
**ஆணையர் அவர்களின் 05.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :16/2009 பொருள் எண்.16

**கல்வித்துறை –தொழிற் பயிற்சி நிலையம் – அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் சிறப்பு கட்டணம் ரூ.1200/– ஐ ரத்து செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை ஆகஸ்ட் 2008 முதல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திலும் நடைமுறைபடுத்த– மன்றத்தின் அனுமதி வேண்டி.**

சென்னை மாநகராட்சி கல்வித்துறை தொழிற் பயிற்சி நிலையத்தில் கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பு உதவியாளர் , குழாய் பொருத்துநர், பொருத்துநர், கம்மியர் மோட்டார் வாகனம், மின்பணியாளர் மற்றும் மின்னணுவியல் ஆகிய ஆறு பாடப் பிரிவுகள் தொடங்கவும் மற்றும் செயல்படவும் 1) அரசு ஆணை எண் 55 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு (எஸ்.2) துறை நாள் 26.04.1999. 2) அரசு ஆணை எண் 292 /2004, ந.நி.ம.கு.வ.துறை நாள் 6.8.2004 மற்றும் மன்றத் தீர்மான எண். 367 நாள் 30.09.2004.ன்படி பெறப்பட்டு தொழிற் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை நிலை எண் 292/2004 ல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் பின்பற்றப்படும் விதிகள், செயல்பாடுகள் மற்றும் கட்டணங்களை பின்பற்றி செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது.

அரசின் 2008– 2009ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணம் ரூ. 1200/–ஐ ஆகஸ்ட் 2008 முதல் ரத்து செய்து அரசாணை (நிலை) எண்.89 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 22.07.2008. ஆணை வெளியிடப்பட்டுள்ளது . அதன்படி அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் 2008 முதல் சிறப்பு கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் சிறப்பு கட்டணமாக திருத்திய வழிமுறைகளின்படி ரூ. 1000/– மட்டுமே மாணவர்களிடம் இருந்து பெறப்பட்டு வருகிறது. ஏனெனில் ஏழை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கு பதிலாக சிறப்பு கட்டணத்தில் ரூ.200/– குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் சிறப்பு கட்டணம் ஏழை எளிய மாணவர்களின் நலன் கருதி ஐந்து மாத தவணைகளில் மாதத்திற்கு ரூ.200/– வீதம் மொத்தம் ரூ.1000/– ஆணையர் அவர்களின் ஆணை பெற்று கடந்த 2007ம் ஆண்டு முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணம் ரூ.1200/– ஐ அரசு ரத்து செய்ததை போல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திலும் பின்பற்ற ஆணையர் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்ட குறிப்பில் ஆணையர் அவர்கள் ஏற்கனவே அரசு வழங்கியுள்ள அரசாணை எண் 292/2004ல் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் சுயநிதியில் செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மாற்று அரசாணை பெற்றப் பிறகு இதனை நடைமுறைப்படுத்த 07.08.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அரசின் ஆணை கடிதம் எண் 36789/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை எம்.சி–3/2007-1 நாள் 06.11.2008ல் அரசாணை எண்.292/2004 க்கு திருத்திய ஆணை கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

**திருத்தம்**

**"சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியத்தில் அரசு விதிகளின்படி மாநகராட்சி நிதியில் இருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது."**

ஆகவே அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணம் ஆகஸ்ட் 2008 முதல் ரத்து செய்து வெளியிடப்பட்ட அரசாணை 89 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 22.07.2008ன் படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திலும் மாணவர்களிடம் ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணம் ரூ.1000/– பெறுவதை ஆகஸ்ட் 2008 முதல் ரத்து செய்து நடைமுறைப்படுத்தவும், கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**க.து.ந.க.எண்:தொ.ப.நி./ 035 / 2008**

1) அரசாணை நிலை எண். 89 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 22.07.2008ன் படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திலும் மாணவர் சேர்க்கைக்கு ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் சிறப்பு கட்டணம் ரூ.1200/– பெறுவதை ஆகஸ்ட் 2008 முதல் ரத்து செய்யவும்,
2) சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் கணினி மற்றும் குழாய் பொருந்துநர் பாடப் பிரிவில் ஆகஸ்ட் 2008–2009க்கு பயிற்சியில் சேர்ந்த மாணவர்களிடம் சிறப்பு கட்டணம் ரூ.1000/– பெறப்பட்டு கல்வி அலுவலர் கணக்கு எண்.3595ல் செலுத்திய தொகையை மாணவர்களுக்கு திரும்பி வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

7.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 02 /2009 நாள் 7.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.04/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.அ1/4155/08
ஆணையர் அவர்களின் 15.12.2008 நாளிட்ட குறிப்பு.

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :17/2009 பொருள் எண்.17

சென்னை மாநகராட்சி உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளில் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ஆசிரியர்கள் நியமித்ததற்கு பின்னேற்பு மற்றும் கூடுதல் மானியத்திற்கு அனுமதி ( ஊதியம் மாற்றி அமைப்பது உட்பட)

மன்றத் தீர்மானம் எண். 185/2004ன் படி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதி ஆசிரியர்களின் பற்றாக்குறையை தீர்க்க பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தேவைப்படும் ஆசிரியர்களை தலைமையாசிரியர்களே மாதத் தொகுப்பூதியத்தில் பணியமர்த்த மன்றத் தீர்மானம் பெறப்பட்டது.

மன்றத் தீர்மானம் எண்.49/8, நாள். 31.01.2008ன் படி 2005–06, 2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் கீழ்கண்டவாறு ஊதியம் வழங்கப்பட்டது.

01. முதுநிலைப்பட்டதாரி ஊதியம் = 2500 மாதம் 9
02. பட்டதாரி ஆசிரியர் /தமிழாசிரியர் = 2000 மாதம் 10
03. இடைநிலை ஆசிரியர் = 1500 மாதம் 10

தற்போதைய சூழ்நிலையில் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பள்ளிகளில் அறிவுப் புகட்டும் ஆசிரியர்களின் ஊதியம் குறைவாக இருப்பதால் கீழ்கண்டவாறு மிகைப்படுத்தி வழங்கப்படலாம் என்று தெரிவித்துள்ளார்கள்.

01. முதுநிலைப்பட்டதாரி = 4000
02. பட்டதாரி ஆசிரியர் / தமிழாசிரியர் = 3000
03. இடைநிலை ஆசிரியர் = 2000

அவ்வாறு தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்படும் ஆசிரியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ஊதியம் வழங்க கூடுதலாக தேவைப்படும் தொகையினை கணக்கு குறியீடு எண். 184 கல்வித்தரம் மேம்பாட்டு செலவினம் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி என்ற கணக்கு தலைப்பில் 2004ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இணை மான்யமாக பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மானம் எண். 185/24.06.04 ன் அடிப்படையில் நடப்பு கல்வியாண்டில் அதாவது 2008–09ல் கூடுதலாக தேவைப்படும் 146 ஆசிரியர்களை அந்தந்தப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மூலம் தொகுப்பூதியம் அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி ஜூன் மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளது.
தேவைப்படும் கூடுதல் இணை மானியத்தின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | ஆசிரியர்களின் விவரம் | 2008–09 ஆம் ஆண்டு ஊதியம் நிர்ணயிக்கப்பட உள்ள தொகை | மொத்த மாதங்கள் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|---|
| 01. | முதுநிலை பட்டதாரி ஆசிரியர் | 4000 | 9 | 73 | 26,28,000 |
| 02. | பட்டதாரி ஆசிரியர் | 3000 | 10 | 71 | 21,30,000 |
| 03. | இடைநிலை ஆசிரியர் | 2000 | 10 | 2 | 40,000 |
| | | | மொத்தம் | 146 | 47,98,000 |

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் கீழ்கண்ட இனங்களுக்கு,

**க.து.ந.க.எண்.அ1/4155/08**

01 2008–09 கல்வியாண்டில் ஆசிரியர்களின் பற்றாக்குறையின் காரணமாக பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் சென்னை மாநகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 146 ஆசிரியர்கள் ஜீன் ''2008 முதல் நியமனம் செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு பெறுவதற்கும்.

02 பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் ஊதியம் மேற்கண்டவாறு ஜீன் ''08 முதல் மாற்றியமைக்கப்படவுள்ள ஊதியத்தை கூடுதல் இணை மான்யம் பெற்று செலவினம் மேற்கொள்வதற்கும்,

03 இக்கூடுதல் செலவினத் தொகை ரூ.47,98,000/–(ரூபாய் நாற்பத்தி ஏழு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) 184 கல்வித்தரம் மேம்பாட்டு செலவினம் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி என்ற தலைப்பில் 2008–2009 ம் ஆண்டு நிதியில் மேற்கொள்ளப்பட்டு செலவு செய்வதற்கும்,

எனவே, இதற்கு நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

7.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 01 /2009 நாள் 7.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.05/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி3/36337/2008</u>
<u>ஆணையரின் 08.12.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :18/2009 பொருள் எண்.18

<u>அரசாணை அமலாக்கம்</u>

அரசாணை எண்.493, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 13.11.2008–ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.07.2008 முதல் 47 விழுக்காட்டிலிருந்து 54 விழுக்காடாக உயர்த்தி திருத்திய அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 14,837 ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படியை ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி/குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படிக்கு கணக்கிடப்பட்டு வழங்க ஒரு ஆண்டிற்கு ரூ. 3.57 கோடி செலவாகும். நடப்பு நிதியாண்டில் (ஜுலை 2008 முதல் மார்ச் 2009 வரை) மட்டும் கூடுதலாக ரூ.2.67 கோடி செலவிடப்பட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மேற்கண்ட அரசாணையை இவ்வலுவலக சுற்றறிக்கை பொ.து.ந.க.எண் பி3/36337/08, நாள்:17.11..2008–ன் வாயிலாக சென்னை மாநகராட்சியில் அமலாக்கம் செய்யப்பட்டது.

எனவே, அரசாணை எண்.493, நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 13.11.2008–ன் படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 47 விழுக்காட்டிலிருந்து 54 விழுக்காடாக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி/குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படிக்கு கணக்கிடப்பட்டு 01.07.08 முதல் சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியமைக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.02/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொது.ந.க.எண்:பி3/ 22071/08

ஆணையாளரின் 17.11.2008 நாளிட்ட குறிப்பு

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :19/2009 பொருள் எண்.19

### அரசாணை அமலாக்கம்

அரசாணை (நிலை) எண் 120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.05.1999 ஆணையின்படி 01.08.1999 முதல் சென்னை மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவ உதவித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மாதம் ரூ. 30/– வீதம் பங்குத் தொகையாக அன்னாருடைய ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு ஓய்வூதியர் மேற்கொள்ளும் சிறப்பு சிகிச்சை/அறுவை சிகிச்சைக்கான மொத்த மருத்துவ செலவினத்தில் 75% அல்லது ரூ. 50,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 188, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 09.05.2008 மூலம் தமிழ்நாடு ஓய்வூதியர் நலத்திட்டத்திற்கு ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாத பிடித்தமாக ரூ. 50/–ஆக உயர்த்தியும் மற்றும் மருத்துவ செலவினத்தில் தற்போதுள்ள 75% அல்லது ரூ. 50,000/– என்ற உச்ச வரம்பை 75% அல்லது ரூபாய் ஒரு இலட்சம் வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாணை 01.04.2008 முதல் செயலாக்கத்திற்கு வருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இவ்வலுவலக 12.08.2008 நாளிட்ட சுற்றறிக்கையின் மூலம் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு சென்னை மாநகராட்சியில் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சியில் 01.08.1999 முதல் ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவ உதவி திட்டத்தின் கீழ் அரசாணை எண் 188, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 09.05.2008ன் படி மாதம் ரூ. 30/–லிருந்து ரூ. 50/– ஆக உயர்த்தி பிடித்தம் செய்யவும், மற்றும் மருத்துவ செலவினத்தில் தற்போதுள்ள 75% அல்லது ரூ. 50,000/– என்ற உச்ச வரம்பை 75% அல்லது ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி இதில் குறைவான தொகை எதுவோ அத்தொகை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட வேண்டும்.

1. இவ்வாணையில் உள்ள உச்ச வரம்பு தொகை ரூபாய் ஒரு இலட்சம் 01.04.2008க்கு பின்னர் மேற்கொள்ளப்படும் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைக்குத்தான் பொருந்தும்.

2. 01.04.2008–க்கு முன்னர் மருத்துவ சிகிச்சை பெற்று ஏற்கனவே மருத்துவ செலவில் 75% அல்லது ரூ. 50,000/– மீள பெற்றிருந்தால் அவர்களுக்கு 01.04.2008க்கு பின்னர் மேற்கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சைக்கு 75% அல்லது ஏற்கனவே மீள பெற்ற தொகை போக உச்ச வரம்பு தொகை ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமலும் மீதி தொகை வழங்கப்பட வேண்டும்.

3. 01.04.2008க்கு முன்னர் மருத்துவ சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொண்டு 01.04.2008க்கு பின்னர் மருத்துவ சிகிச்சைக்குண்டான மீள பெறும் தொகைக்கு மனு அளித்தால் அவ்வினங்களில் சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொண்ட நாளில் செயலாக்கத்தில் உள்ள ஆணைப்படிதான் மீள பெறும் தொகை அளிக்கப்பட வேண்டும்.

எனவே, அரசாணை எண் 188, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 09.05.2008ன் படி தமிழ்நாடு ஓய்வூதியர் நலத்திட்டத்திற்கு ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாத பிடித்தமாக ரூ.50/– ஆக உயர்த்தியும் மற்றும் மருத்துவ செலவினத்தில் தற்போதுள்ள 75% அல்லது ரூ.50,000/–என்ற உச்ச வரம்பை 75% அல்லது ரூ.1 இலட்சம் என உயர்த்தியதற்கு நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.02/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மி.து.ந.க.எண்.இ.பொ/வ/216/ம 2/2009

ஆணையர் அவர்களின் 10.01.2009 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :20/2009 பொருள் எண்: 20

## மதிப்பீடு

வார்டு எண்.28 மண்டலம் – 2

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மின்துறை – காமராஜ் சாலையில் உள்ள நேப்பியர் பாலத்திற்கு சிறப்பு வகை ஒளிரூட்டும் விளக்குகள் அமைக்கும் பணி |
| பணி மேற்கொள்ள இருக்கும் துறை | மின்துறை |
| மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ 158.90 இலட்சங்கள் |
| விலைப்பட்டி ஆண்டு | விளக்கு பிட்டிங்குகள்: சந்தை விலை<br>மின் கேபிள்கள் மற்றும் மின்கேபிள் இடும் பணி } PWD 2008-2009 விலைப்பட்டியல் |
| நிதியின் மூலத் தன்மை | மூலதன நிதி – மின்துறை 2008–2009 |
| வார்டு குழு தீர்மான பரிந்துரை எண் மற்றும் நாள் | பின்னர் பெறப்படும் |

சென்னை மெரீனா கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக காமராஜ் சாலையில் வார்டு 28 / மண்டலம் –2–ல் உள்ள நேப்பியர் பாலத்தில் சிறப்பு வகை விளக்குகள் அமைக்க கலந்தறிதற்குரியர் M/s. G.A.ARCHITECTS PVT LTD., மற்றும் M/s. LIGHTING DESIGN PARTNERSHIP PVT LTD., அவர்கள் அளித்த திட்ட விவரப்படி இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டள்ள மதிப்பீடு ரூ. 158.90 இலட்சங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.8/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.13/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மி.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.5.ந.க.எண்.பி3/7348/3/2008

ஆணையர் அவர்களின் 09.01.2009 நாளிட்ட குறிப்பு

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :21/2009 பொருள் எண். 21

**ஒப்பம் – ஒப்புதல்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | : | சர்வே எண்.25/1, 32/2, 34/1 மற்றும் 34/4க்குறிய நகர அளவை எண்கள் முறையே 54, 57 மற்றும் 58, பகுதி எண்.52 கோயம்பேடு கிராமம், ஜெய் நகரில் புதிய பூங்கா அமைக்கும் பணி | | | |
| 2. | மதிப்பீட்டுத் தொகை | : | ரூ.2,84,20,000/– | | | |
| 3. | மதிப்பீடு ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்ற தீர்மான எண்.521/2008, நாள் 30–9–2008 | | | |
| 4. | பணித் தொகை | : | ரூ.2,35,37,772.66 | | | |
| 5. | ஒப்ப நாள் | : | 14-11-2008 | | | |
| 6. | ஒப்பம் பெறப்பட்ட விவரம் | : | இரண்டு ஒப்பம் | | | |
| 7. | ஒப்ப விலைப்புள்ளி விவரம் | : | வ. எ ண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பத் தொகை | ஒப்பம் சதவீதம் (2008–09 விலைப்படி) |
| | | | 01. | ஸ்ரீ. வெங்கடாசலபதி அண்டு கோ | 4,02,16,600/- | (+)70.86% |
| | | | 02. | ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ | 3,85,10,920/- | (+)63.61% |
| 8. | மூன்றாவது பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை | : | ரூ.3,24,05,165/– | | | |
| 9. | 2008–09ம் ஆண்டு அலுவலக விலைப்படி ஒப்ப சதவிகிதம் | : | (+)37.67% | | | |
| 10. | 15–11–2008 நாளன்று உள்ள சந்தைவிலைப்படி ஒப்ப சதவிகிதம் | : | **(+) 5.49%** | | | |
| 11. | வார்டுகுழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | : | 5வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.12, நாள் 7–1–2009 | | | |

எனவே, கோட்டம்–65, சர்வே எண்.25/1, 32/2, 34/1 மற்றும் 34/4 தற்போதைய டி.எஸ். எண். 54, 57 (ம) 58 பிளாக்–52, கோயம்பேடு கிராமம், ஜெய்நகரில் புதிய பூங்கா அமைக்கும் பணி செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு மூன்று முறை நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப்பின் குறைத்து அளித்த ஒப்பத்தொகையான ரூ.3,24,05,165/– க்கு (அதாவது 2008–09ம் ஆண்டின் விலையை விட (+)37.67% அதிகம் மற்றும் தற்போதைய 15–11–2008 நாளிட்ட சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (+)5.49% அதிகம் ) இப்பணியை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.7/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.14/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.5.ந.க.எண்.பி1/ 8316 / 22 /2008
ஆணையாளர் அவர்களின் 06–01–2009 நாளிட்ட குறிப்பு

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :22/2009 பொருள் எண் : 22

### மதிப்பீடு – ஒப்புதல்

| | | |
|---|---|---|
| வார்டு எண்–66 | : | மண்டலம்–5 |
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | : | டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கோபூர பூங்காவில் உள்ள ‘‘டவர் பிளாசா’’ மேம்படுத்தும் பணி. |
| பணி மேற்கொள்ளவிருக்கும் துறை / மண்டலம் | : | மண்டலம்–5 |
| மதிப்பீட்டுத் தொகை | | ரூ.1,31,00,000/– |
| விலைப்பட்டி ஆண்டு | : | 2008–09ம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | : | பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் 2008–09 (மூலதனப்பணி) |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள். | : | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.17, நாள்.7–1–2009 |

எனவே, மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,31,00,000/– க்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.13/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.15/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி5/565/2008

**ஆணையர் அவர்களின் 10.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :23/2009 பொருள் எண் : 23

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 68 மண்டலம் : 5

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மண்டலம்– 5ல், வார்டு–68 ல் புல்லா அவன்யூ செனாய் நகரில் 5வது மண்டல அலுவலக கட்டடம் கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை | ரூ.525.00 இலட்சங்கள் |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்றத் தீர்மானம் எண்.92/2008, நாள்.29.02.2008 மற்றும் அரசாணை எண்.82, நாள்.21.05.2008, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |
| விலைப்பட்டி ஆண்டு | பொதுப்பணித்துறையின் 2007–08ஆம் ஆண்டின் கட்டிட பரப்பளவு விலைவிகித அடிப்படையில் |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/ திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (அ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீபதி அசோசியேட்ஸ் | ரூ.5,67,53,975.25 | ரூ.10,95,31,590.00 | (+)92.99% அதிகம் |
| 2. | ஆர்.பி.பி. கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | ரூ.5,67,53,975.25 | ரூ.10,46,99,625.00 | (+)84.48% அதிகம |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | நாள் 14.11.2008, 24.11.2008, 19.12.2008, மற்றும் 26.12.2008 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | **ரூ.7,43,47,270.00** |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள்.ஆர்.பி.பி. கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | **ரூ.7,43,47,270.00** |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | **(+) 31.00% அதிகம்** |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 |

மேற்கண்ட பணிக்கு பொதுப்பணித்துறையின் 2007–08ஆம் ஆண்டின் கட்டிட பரப்பளவின் விலைவிகித அடிப்படையில் தோராய திட்ட மதிப்பீடு ரூ.525.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு, இதற்கு அரசின் நிர்வாக அனுமதி, அரசாணை (நிலை) எண்.82, நாள்.21.05.2008 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நு1) துறை மூலம் பெறப்பட்டுள்ளது. இதற்கிடையில் 2008–09ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல் நடைமுறைக்கு வந்துள்ளமையால் இதன்படி மறுவிவர திட்டமதிப்பீடு ரூ.655.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு அரசின் திருத்திய நிர்வாக அனுமதி பெறவும் மற்றும் இப்பணியின் அவசியம் மற்றும் அவசியத்தை கருதி மறுவிவர திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் திருத்திய நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரியமைக்கும் மன்றத்தின் அனுமதி தீர்மானம் எண்.313/2008, நாள்.30.07.2008 மூலம் பெறப்பட்டுள்ளது. ஆனால் தற்போது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி மேற்கண்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியே போதுமானது.

<u>க.து.ந.க.எண்.பி5/565/2008</u>

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 24.10.2008 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களும் முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் (Price Bids) 06.11.2008 அன்று திறக்கப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.10,46,99,625.00 ஆகும். இது 2008–09ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.5,67,53,975.25யை விட (+) 84.48 % அதிகமாகும். எனவே, குறைந்த ஒப்பந்ததாரர் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுடன் 26.12.2008 அன்று நடைபெற்ற 4ஆம் முறை பேச்சு வார்த்தைக்குப்பின் இவரது இறுதி ஒப்பத்தொகை ரூ.7,43,47,270.00 ஆகும். இது 2008–09 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) 31.00 % அதிகமாகும். மேலும் நடப்பு சந்தை விலைகளுடன் (The Hindu Property Plus dated 20.12.2008) ஒப்பிடுகையில் இவரது ஒப்பவிழுக்காடு (+)9.67% அதிகமாகும்.

மேற்கண்ட பணிக்கான ஒப்பங்கள் 06.01.2009 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு இதற்கு பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ரூ.7,43,47,270.00 (ரூபாய் ஏழு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து இருநூற்று எழுபது மட்டும்)க்கான அதாவது 2008-2009 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)<u>31.00</u>% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை அவர்களுக்கு அளிக்க அனுமதியும்

2. மேற்கண்ட திட்டப்ப ணிக்கு 2008–09 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள மறுவிவர திட்ட மதிப்பீடு ரூ.655.00 இலட்சங்களுக்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும்

3. மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி ஒப்பங்கள் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.11/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.19/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி10/1981/2008

ஆணையர் அவர்களின் 09.01.2009 நாளிட்ட குறிப்பு

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :24/2009 பொருள் எண் : 24

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 151 மண்டலம் : 10

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | வார்டு – 151ல், அடையார், வெங்கட ரத்திணம் நகரில் 24x7 EOC கட்டடம் கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை | ரூ.230.00 இலட்சங்கள் |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்றத்தின் தீர்மான எண்.561/2008, |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/ திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (அ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2008–2009 ஆம் ஆண்டு விலைவிகிதப்படி விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திரு.வி.இராமகிருஷ்ணன் | ரூ.2,00,65,457.70 | ரூ.2,72,39,240.00 | (+)35.75% அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | நாள் 24.11.2008 மற்றும் 05.12.2008 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | **ரூ.2,35,48,322.98** |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திரு.வி.இராமகிருஷ்ணன் |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | **ரூ.2,35,48,322.98** |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | **(+) 17.36% அதிகம்** |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.வி.இராமகிருஷ்ணன் அவர்களின் **ரூ.2,35,48,322.98** க்கான அதாவது 2008–09ம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+) 17.36% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க நிலைக்குழு (பணிகள்) நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**12.1.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**14/2009**, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**13.01.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**22/2009** , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.பி2/1741/2007**
**ஆணையர் அவர்களின் 10.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :25/2009 பொருள் எண் :25

**ஒப்பம் ஏற்பு மற்றும் விவர திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல்**

சென்னை மாநகராட்சியின் 2007–2008 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தொடக்க உரையில், சென்னை மாநகராட்சி வழங்கும் சேவையின் தரத்தை உயர்த்துதல் மற்றும் பணிபுரியும் இடத்தின் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அனைத்து மண்டல மற்றும் வார்டு அலுவலகங்கள் நவீன வசதி வாய்ப்புகளுடன் படிப்படியாக மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முதற் கட்டடமாக, வடசென்னையில் ஒரு நவீன மண்டல அலுவலகமும், தென் சென்னையில் நவீன மண்டல அலுவலகமும் கட்டும் பொருட்டு நில அளவை (Survey) செய்ததில், வடசென்னையில் வார்டு 31ல் முன்பு ‘B’ மாட்டுத்தொழுவமாக பயன்படுத்தப்பட்டு தற்போது பயனற்ற நிலையில் காலியாக உள்ள இடம் நவீன மண்டல அலுவலகம் கட்டுவதற்கு உகந்ததாக தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை வடிவமைப்பு செய்வதற்கான பணி கட்டடத்துறையின் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டட எழில் கலைஞர் திருவாளர்கள். ஜி. ஏ. அசோசியேட்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு பொதுப்பணித்துறையின் 2007–08ஆம் ஆண்டின் கட்டிட பரப்பளவின் விலைவிகித அடிப்படையில் தோராய திட்ட மதிப்பீடு ரூ.835.00 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இதற்கு அரசின் நிர்வாக அனுமதி பெற மன்றத் தீர்மானம் எண்.635/2007, நாள்.29.12.2007மூலம் பெறப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி வேண்டி 21.01.2008 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் அரசினால் கேட்கப்பட்ட கூடுதல் விவரங்கள் இவ்வலுவலக 04.03.2008,31.03.2008,27.05.2008 மற்றும் 21.07.2008 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் தற்போது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி மேற்கண்ட திட்டமதிப்பீட்ற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியே போதுமானது என்று தெரிவிக்கப்பட்டு அரசின் நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்ட திட்ட மதிப்பீடு சென்னை மாநகராட்சிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் 2008–09ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல் நடைமுறைக்கு வந்துள்ளமையால் இதன்படி மறுவிவர திட்டமதிப்பீடு ரூ.931.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியம் மற்றும் அவசியத்தை கருதி மறுவிவர திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 24.10.2008 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இரண்டு ஒப்பந்ததாரர்களும் முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் (Price Bids) 05.11.2008 அன்று திறக்கப்பட்டன. இதன் விவரங்கள் கீழ்வருமாறு

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2008-2009 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள். பி&சி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.7,86,07,535.47 | ரூ.16,39,44,517.00 | (+)108.56% அதிகம் |
| 2. | திருவாளர்கள். சிவா இன்ஜினியரிங் கம்பெனி | ரூ.7,86,07,535.47 | ரூ.14,88,01,125.00 | (+)89.30% அதிகம் |

இதில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.14,88,01,125.00 ஆகும். இது 2008–09ஆம் ஆண்டின் அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.7,86,07,535.47யை விட (+) 89.30% அதிகமாகும். எனவே, குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களுடன் 29.12.2008 அன்று நடைபெற்ற 4ஆம் முறை பேச்சு வார்த்தைக்குப்பின் இவரது இறுதி ஒப்பத்தொகை ரூ.10,29,59,519.00 ஆகும். இது 2008–09 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) 30.98% அதிகமாகும். மேலும் நடப்பு சந்தை விலைகளுடன் (The Hindu Property Plus dated 20.12.2008) ஒப்பிடுகையில் இவரது ஒப்பவிழுக்காடு (+) 10.40% அதிகமாகும்.

<u>க.து.ந.க.எண்.பி2/1741/2007</u>

மேற்கண்ட பணிக்கான ஒப்பங்கள் 06.01.2009 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு இதற்கு பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியின் ஒப்பத்தொகையானது ரூ.10.00 கோடிக்கு மேல் உள்ளதால் இவ்வொப்பத்தை ஏற்க அரசின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

1. பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.சிவா இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் ரூ.10,29,59,519.00 (ரூபாய் பத்து கோடியே இருபததொண்பது இலட்சத்து ஐம்பத்தொண்பதாயிரத்து ஐந்நூற்று பத்தொண்பது மட்டும்)க்கான அதாவது 2008-2009 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)30.98% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை அவர்களுக்கு அளிக்க அரசின் அனுமதி வேண்டி அரசிற்கு கடிதம் அனுப்ப அனுமதியும்

2 மேற்கண்ட திட்டப்பணிக்கு 2008–09 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள மறு விவர திட்ட மதிப்பீடு ரூ.931.00 இலட்சங்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் மற்றும்

3. மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதியும் வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.12/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.18/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இனம் 1ல் தெரிவித்துள்ளப்படி அரசின் ஒப்புதல் வேண்டி என்பதற்கு பதிலாக அரசு கடித எண்.(எம்.எஸ்).155, நாள்.15.11.2007 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அளித்துள்ள விளக்கத்தின்படி மன்றத்தின் அனுமதியே போதுமானது என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.‘‘

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :26/2009 பொருள் எண்.26

### சாலைகளை சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க அனுமதி வேண்டுதல்

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள கீழ்க்கண்ட சாலைகளை நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலிருந்து சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க அரசின் அனுமதி பெறுவதற்கு மன்றத் தீர்மானம் எண். 532/2008, நாள்.30.9.08ல் அனுமதி பெறப்பட்டது.

| வ.எண். | மண்டலம் எண் | சாலையின் பெயர் | நீளம் (கி.மீ.) |
|---|---|---|---|
| 1 | 6,7,8, 9 | அண்ணா சாலை (சென்னை மாநகராட்சி எல்லை வரை) | 11.70 |
| 2 | 3,5,7 | ஈ.வெ.ரா. பெரியார் சாலை (சென்னை மாநகராட்சி எல்லை வரை) | 10.20 |
| 3 | 1,2,3 | வ.உ.சி. சாலை, ஜி.என்.டி. சாலை (சென்னை மாநகராட்சி எல்லை வரை) | 7.30 |
| 4 | 5,8,9 | ஜவஉறர்லால் நேரு சாலை (100 அடி சாலை (சென்னை மாநகராட்சி எல்லை வரை) | 10.30 |
| | | மொத்தம் | 39.50 |

அதன்படி மேற்கண்ட நான்கு சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பிற்கு சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க, பே.சா.து.ந.க.எண்.பி4/2573/2008 நாள்.31.10.08ல் அரசின் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட இரண்டு சாலைகளும் நெடுஞ்சாலைத் துறை வசம் உள்ளதால் துப்புரவு பணிகள், கட்டிடக் கழிவுகள் அகற்றும் பணிகள், கட்டிடம் கட்ட திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் பணிகள், மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் மற்றும் பராமரிக்கும் பணிகள், தெரு விளக்குகள் அமைக்கும் மற்றும் பராமரிப்புப் பணிகள் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளதால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் இருவேறு துறைகள் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும்போது பிற சேவை நிறுவனங்களான தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தொலைபேசி நிறுவனம் போன்ற துறைகளின் ஒருங்கிணைப்பு இல்லாததால் பணிகள் மேற்கொள்ளும்போது கால தாமதம் ஏற்படுகிறது.

| வ.எண். | மண்டலம் எண். | சாலையின் பெயர் | நீளம் கி.மீ. |
|---|---|---|---|
| 1 | 10 | தரமணி இணைப்பு சாலை (அமெரிக்கன் பள்ளி முதல் விஜய் நகர் பஸ் நிறுத்தம் வரை) | 3.330 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 10 | வேளச்சேரி புறவழிச்சாலை (வேளச்சேரி பிரதான சாலை – குருநானக் கல்லூரி முதல் விஜய் நகர் பஸ் நிறுத்தம் வரை) | 1.900 |
| | | மொத்தம் | 5.230 |

எனவே மேற்கண்ட **5.230** கி.மீ. நீளமுள்ள இரண்டு சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பிற்கு சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

**12.1.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**4/2009**, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**13.01.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**08/2009** , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/370/2008**
**ஆணையர் அவர்களின் 10.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :27/2009 பொருள் எண். 27

**தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான ஒப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோர மன்றத்தின் அனுமதி கோரல்**

மண்டலம்–2, கோட்டம் –24 (ம)31ல் தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்கள் மூலம் பெறப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தீர்மான எண்.641/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1. மேற்கண்ட சாலை சந்திப்புகளில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகளை மேற்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் நியமனம் செய்யபட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்
2. பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் தமிழ்நாடு நிலஆர்ஜித சட்டம் 1984ன் படியாகவும் அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிலத்தின் மீதான மேம்பாட்டு உரிமை மாற்றம் (Transfer of Development Rights) மூலமாகவோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அனுமதியும் இதற்கான நிதி உதவியை அரசிடம் கோருவதற்கு அனுமதியும்
3. பெறப்படும் வடிவமைப்பின்படி இப்பணிக்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள அனுமதியும்,

கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியட்ஸ் அவர்கள் பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்தார்கள். அதன் அடிப்படையில் ரூ. 26,00,00,000.00க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தீர்மான எண்.157/2008, நாள்.03.05.2008ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டது.

1. தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நில ஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.26,00,00,000/–க்கு அனுமதியும்,
2. அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் இப்பணிக்கு ஒப்பங்கள் கோர அனுமதியும்,
3. சேவைத்துறையினர் கோரிய முன்பணத்தினை வழங்க அனுமதியும்,
4. இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதி,

அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டி அரசுக்கு கடிம் அனுப்பப்பட்டது. இத்திட்டம் 2007–2008ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு சட்டமன்ற ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதால் அரசி ன்ஆட்சி முறை ஒப்பளிப்பை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் ஒப்பம் முடிவு செய்யவும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பங்கள் கோரப்பட்டன.

ஒப்ப நாளான 26.09.2008 அன்று ஒரே ஒரு ஒப்பம் திருவாளர்கள். கேமன் இந்தியா லிமிடெட் அவர்களிடம் இருந்து பெறப்பட்டது. 26.09.2008 அன்று ஒப்பந்ததாரர் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரர் பணி மேற்கொள்ள வேண்டிய தகுதி பெற்றிருந்ததால், ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 03.10.2008 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

| வ. எண் | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு 2008–09 விலைப்படி | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2008–09 விலையின்படி விழுக்காடு | பணியின் அலுவலக மதிப்பு செப்டம்பர் சந்தைவிலைப்படி | சந்தைவிலையின் படி விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|

**பா.து.ந.க.எண்.பி3/370/2008**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் | ரூ.146079707.05 | ரூ.345432248 | (+) 136.47 % | ரூ.164274012.19 | (+)110.28 % |

ஒப்பந்ததாரர் திருவாளர்கள். கேமன் இந்தியா லிட்., அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ. 345432248./– ஆனது 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.146079707.05/– உடன் ஒப்பீடு செய்யப்பட்டதில் (+)136.47% சதவீதம் கூடுதல் ஆகும். மேலும் செப்டம்பர்–2008ஆம் மாத சந்தை விலை விவரப்படி (+)110.28% ஆகும். பெறப்பட்ட விலைவிகிதம் கூடுதலாக இருந்தமையால் 17.10.2008 அன்று ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 22.10.2008 நாளிட்ட கடிதம் மூலம் தான் அளித்துள்ள ஒப்பத்தொகையில் 0.1% விலைக்குறைப்பு செய்வதாக தெரிவித்தார். விலைக்குறைப்பிற்கு பின் ஒப்ப தொகையான ரூ.345086815.75ஆனது 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 136.23 % ஆகும். செப்டம்பர்–2008ஆம் மாத சந்தை விலை விவரப்படி (+)110.07% ஆகும். மேற்குறிப்பிட்ட ஒப்ப விவரங்கள் 25.11.2008 அன்று நடைபெற்ற ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றை ஆய்வு செய்த ஒப்பக்குழுமம், சமீபத்தில் இதே போன்ற பணிகளுக்காக மற்ற துறைகளாலும் வழங்கப்பட்ட ஒப்பத்தொகையோடு ஒப்பிட்டு கூறும்படியும், முதற்கட்ட பணிகளான சேவைத்துறையினரின் நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க நிலங்கள் எப்போது நிலமாற்றம் செய்து தரப்படும் இதனால் கட்டுமானப் பணிகளுக்கு எப்போது பணியிடத்தை ஒப்பந்ததாரருக்கு கொடுக்க இயலும் என்பதையறிந்து ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கும்படி கூறியது.

கீழ்கண்ட ஒப்ப விவரங்கள் 25.11.2008 அன்று நடைபெற்ற ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டன

பாலங்கள் துறையில் சமீபத்தில், (1) வில்லிவாக்கம் சந்திக்கடவில் சுரங்கப்பாதை (2) மணியக்கார சத்திரத்தெரு சந்திக்கடவில் சுரங்கப்பாதை (3) கத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் காக்ரேன் பேசின் சாலை சந்திப்பில் உள்ள சந்திக்கடவில் மேம்பாலம் ஆகிய பணிகளுக்கான தொகுப்பு ஒப்பம் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட் அவர்களுக்கு ரூ.29,35,89,745.31க்கு வழங்கப்பட்டது. இது 2006–2007ஆம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரித்த அலுவலக மதிப்பீட்டைவிட (+)58.58% சதவீதம் அதிகமாகும். மேலும் 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைகளைவிட (+)47.77 சதவீதம் அதிகமாகும்.

அடுத்து (1) சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலை சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை (2) ரங்கராஜபுரம் சந்திக்கடவில் மேம்பாலம் மற்றும் (3) ஆலந்தூர் சாலையில் உயர்மட்ட பாலம் ஆகிய பணிகளுக்கான தொகுப்பு ஒப்பம் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட் அவர்களுக்கு ரூ. 31,44,90,569.27க்கு வழங்கப்பட்டது. இது 2006–2007ஆம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரித்த அலுவலக மதிப்பீட்டைவிட (+)59.46 சதவீதம் அதிகமாகும். மேலும் 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைகளைவிட (+)47.11 சதவீதம் அதிகமாகும்.

அடுத்து பெரம்பூர் மேம்பாலப்பணி திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டிரக்சர்ஸ் அண்டு பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்களுக்கு ரூ.40,16,10,206.13க்கு வழங்கப்பட்டது. இது 2008–2009 ஆம் ஆண்டு விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.230899871.90ஐ விட (+)73.93% அதிகம் ஆகும்.

இதேபோன்று நெடுஞ்சாலை துறையில் மேற்கு நீளப்பெருஞ்சாலை (GWT) அமைந்தகரையில் உள்ள பாலத்தையொட்டி புதிய பாலம் திருவாளர்கள். சக்தி இன்ஜினியரிங் கன்ஸ்டிக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.6,21,57,047.92 ஒப்பத்தொகைக்கு வழங்கப்பட்டது. இது 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைகளைவிட 29.30 சதவீதம் அதிகமாகும்.

சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் அத்துறையை சார்ந்த நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க ரூ.3,33,00,000/–ற்கு மதிப்பீடு பெறப்பட்டது. முதல் தவணையாக ரூ,10,00,000/– வழங்கப்பட்டது. மீதத்தொகை திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறப்பட்ட பின்னர் வழங்கப்படும். சென்னை குடிநீர் வாரியம் நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க ஒப்பங்கள் கோரியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கம்பி வடங்களை மாற்றியமைக்க ரூ.1,78,44,465/–க்கு மதிப்பீடு பெறப்பட்டுள்ளது.

ராணுவ பொறியியல் நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பொதுப்பணித்துறையிடம் இருந்து பழைய சிறைச்சாலை சாலையில் 47 மனை மற்றும் 2280 ச.அடி. நிலம் நிலமாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. பேசின் பால சாலையில் சென்னை மாநகராட்சியினை சார்ந்த நிலம் மரக்கடை வியாபாரிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 37 மரக்கடை வியாபாரிகளில் 7 மரக்கடை வியாபாரிகள் வழக்கு தொடர்ந்துள்ளனர். தீர்ப்பு எதிர்நோக்கப்பட்டுள்ளது. நிலமாற்றம் செய்யப்பட வேண்டிய நிலங்களின் விவரங்கள் மாவட்ட ஆட்சியர் மூலம் ஆணையர், நில ஆர்ஜிதம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ராணுவ பொறியியல் சேவை நிறுவனம் தனது 20.02.2008 நாளிட்ட கடிதத்தின் மூலம் இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிலத்தை அளிக்க மறுப்பு தெரிவித்துள்ளனர்.

மேற்கூறப்பட்ட நிலங்களை நிலமாற்றம் செய்து பெறப்பட்ட பின்னரே சென்னை குடிநீர் வாரியத்திற்கு அத்துறையினை சார்ந்த நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க தேவைப்படும் பணியிடத்தினை வழங்க இயலும். பணியிடம் வழங்கிய பின்னர் நிலத்தடி குழாய்களை மாற்றியமைக்க 6 மாத காலம் அவகாசம் தேவைப்படும்.

மேம்பால ஒப்பத்தின் செல்லத்தக்க நிலை 25.12.2008ல் முடிவடைவதால் ஒப்பம் செல்லத்தக்க நிலையை மேலும் 3 மாதத்திற்கு நீட்டி கொடுக்கும்படி ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இன்று வரை ஒப்பந்ததாரரிடம் பதில் பெறப்படவில்லை.

நிலமாற்றம் செய்வதற்கும் சேவைத்துறையினரின் நிலத்தடிக்குழாய்கள் மற்றும் கம்பிவடங்களை மாற்றியமைப்பதற்கும் நீண்ட காலம் தேவைப்படும் என்பதாலும், இச்சூழ்நிலையில் தற்போதைய ஒப்பத்தை ஒப்புக்கொள்ளத்தகாத நிலை ஏற்படுகிறது. மேற்கூறிய விவரங்கள் 02.01.2009 அன்று நடந்த ஒப்பக்குழும கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விவரங்களை ஆய்வு செய்த ஒப்பக்குழுமம் நிலமாற்றம் செய்து நிலங்களை சேவைத்துறையினரின் நிலத்தடி குழாய்கள் மற்றும் கம்பி வடங்களை மாற்றியமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பப்பட்டு வருவதால் தற்போதைய ஒப்பத்தை ரத்து செய்து பின்னர் புதியதாக ஒப்பங்கள் கோரவும் பரிந்துரை செய்தது.

எனவே, ஒப்பக்குழுமத்தின் பரிந்துரையை ஏற்று தங்கசாலை சந்திப்பில் வாகன மேம்பாலம் அமைக்கும் பணிக்கு கோரப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்து பின்னர் புதியதாக ஒப்பங்கள் கோர நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.5/2009, நாள்:12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.11/2009, நாள்:13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/ 1508 /2001**

**ஆணையர் அவர்களின் 10.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :28/2009 பொருள் எண். 28

**கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கான ஒப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோர மன்றத்தின் அனுமதி கோரல்**

மண்டலம்–1, கோட்டம் –10 மற்றும் 11ல் கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே தியாகப்பா செட்டித்தெருவையும் மற்றும் கண்ணன் தெருவையும் இணைத்து வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மன்ற தீர்மான எண்.278/2003, நாள்.30.05.2003 மூலம் கீழ்க்காண்பவைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

(1) இத்திட்டத்திற்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அளித்துள்ள தோராய மதிப்பீட்டுத்தொகையான ரூ.720 லட்சங்களுக்கு ஒப்புதலும் மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,
(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
(3) இத்திட்டத்திற்கான தொகையினை, சென்னை மாநகராட்சி, மற்றும் நிதி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதி,

இதனடிப்படையில் அரசுக்கு 21.07.2003 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. இதனிடையே பொதுமக்களின் நலன் மற்றும் விருப்பம் கருதி இத்திட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுரங்கப்பாதை பகுதிக்கு 2005 – 2006 அலுவலக விலைப்பட்டியிலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.496.40 லட்சங்களுக்கு ஒப்புதலும், திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும் 08.08.2006 அன்று ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டது. ஒப்பங்கள் கோரப்பட்டதில். ஒப்பங்கள் ஏதும் விற்பனையாகவில்லை.

2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.494.50 லட்சங்களுக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.96/2007, நாள் 09.03.2007ன் மூலம் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

(1) 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.494.50 லட்சங்களுக்கு அனுமதியும் மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதியும்,
(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
(3) இத்திட்டத்திற்கான செலவினத்தை சென்னை மாநகராட்சி மூலதன நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள அனுமதியும்,
(4) 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.494.50 லட்சங்களுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத மன்றத்தின் அனுமதி

அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு அரசாணை நிலை எண்.84, நாள் 11.06.2007 மூலம் பெறப்பட்டது. இதனிடையே இரயில்வே துறை வரைபடத்தை சற்று மாற்றியமைத்தது. அதன் அடிப்படையில் 2007 – 2008ம் ஆண்டு விலைப்பட்டியல்படி ரூ.628.00 லட்சங்களுக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தீர்மான எண்.98/2008, நாள்.29.02.2008 மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு அரசாணை எண்.104, நாள்.06.06.2008 மூலம் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டினை கொண்டு ஒப்பம் கோரப்பட்டது. ஒப்ப நாளான 27.06.2008 அன்று ஒரே ஒரு ஒப்பம் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட் அவர்களிடம் இருந்து பெறப்பட்டது. 27.06.2008 அன்று ஒப்பந்ததாரர் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரர் பணி மேற்கொள்ள வேண்டிய தகுதி பெற்றிருந்ததால், ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 07.07.2008 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

| வ. எண் | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2007 –2008 விலையின்படி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிமிடெட் | ரூ.3,78,52,837.00 | ரூ.7,24,20,856.00 | (+) 91.32 % |

ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட்., (SPML) அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ. 7,24,20,856/– ஆனது 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.3,78,52,837/– உடன் ஒப்பீடு செய்யப்பட்டதில் (+)91.32% சதவீதம் கூடுதல் ஆகும். 2008–2009ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி ஒப்ப சதவீதம் (+) 62.84%, மேலும் ஜுன்–2008ஆம் மாத சந்தை விலை விவரப்படி (+)37.66% ஆகும். பெறப்பட்ட விலைவிகிதம் கூடுதலாக இருந்தமையால் 07.07.2007 அன்று ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 09.07.2008 நாளிட்ட கடிதம் மூலம் தான் அளித்துள்ள ஒப்பத்தொகையில் 1% விலைக்குறைப்பு செய்வதாக தெரிவித்தார். விலைக்குறைப்பிற்கு பின் ஒப்ப தொகையான ரூ.7,16,96,647.44 ஆனது 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 89.41 % ஆகும். 2008–2009ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி ஒப்ப சதவீதம் (+) 61.21%, ஜுன்–2008ஆம் மாத சந்தை விலை விவரப்படி (+)36.28% ஆகும்.

மேற்குறிப்பிட்ட ஒப்ப விவரங்கள் 22.07.2008 அன்று நடைபெற்ற ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றை ஆய்வு செய்த ஒப்பக்குழுமம், சமீபத்தில் இதே போன்ற பணிகளுக்காக மற்ற துறைகளாலும் வழங்கப்பட்ட ஒப்பத்தொகையோடு ஒப்பிட்டு அதற்கேற்ப விலைக்குறைப்பு செய்திட மேற்பார்வை பொறியாளர்(பாலங்கள்) அவர்களைக் கேட்டுக்கொண்டது.

பாலங்கள் துறையில் சமீபத்தில், (1) வில்லிவாக்கம் சந்திக்கடவில் சுரங்கப்பாதை (2) மணியக்கார சத்திரத்தெரு சந்திக்கடவில் சுரங்கப்பாதை மற்றும் (3) கத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் காக்ரேன் பேசின் சாலை சந்திப்பில் உள்ள சந்திக்கடவில் மேம்பாலம் ஆகிய பணிகளுக்கான தொகுப்பு ஒப்பம் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மாக்கெட்டிங் லிமிடெட் அவர்களுக்கு ரூ.29,35,89,745.31க்கு வழங்கப்பட்டது. இது 2006–2007ஆம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரித்த அலுவலக மதிப்பீட்டைவிட (+)58.58% சதவீதம் அதிகமாகும். மேலும் 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைகளைவிட (+)47.77% சதவீதம் அதிகமாகும்.

அடுத்து (1) சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலை சந்திக்கடவில் வாகனச்சுரங்கப்பாதை (2) ரங்கராஜபுரம் சந்திக்கடவில் மேம்பாலம் மற்றும் (3) ஆலந்தூர் சாலையில் உயர்மட்ட பாலம் ஆகிய பணிகளுக்கான தொகுப்பு ஒப்பம் திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மாக்கெட்டிங் லிமிடெட் அவர்களுக்கு ரூ. 31,44,90,569.27க்கு வழங்கப்பட்டது. இது 2006–2007ஆம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரித்த அலுவலக மதிப்பீட்டைவிட (+)59.46% சதவீதம் அதிகமாகும். மேலும் 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைகளைவிட (+)47.11% சதவீதம் அதிகமாகும்.

அடுத்து பெரம்பூர் மேம்பாலப்பணி திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டிரக்சர்ஸ் அண்டு பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்களுக்கு ரூ.40,16,10,206.13க்கு வழங்கப்பட்டது. இது 2008–2009 ஆம் ஆண்டு விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.230899871.90ஐ விட (+)73.93% அதிகம் ஆகும்.

இதேபோன்று நெடுஞ்சாலை துறையில் மேற்கு நீளப்பெருஞ்சாலை (GWT) அமைந்தகரையில் உள்ள பாலத்தையொட்டி புதிய பாலம் கட்டும் பணி திருவாளர்கள். சக்தி இன்ஜினியரிங் கன்ஸ்டிரக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.6,21,57,047.92 ஒப்பத்தொகைக்கு வழங்கப்பட்டது. இது 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைகளைவிட 29.30 சதவீதம் அதிகமாகும்.

திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட் அவர்களிடம் மீண்டும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 25.07.2008 நாளிட்ட கடிதம் மூலம் இறுதியாக தாங்கள் ஒப்ப ஆவணத்தில் குறிப்பிட்ட தொகையில் 2% விலைகுறைப்பு செய்வதாக சம்மதம் தெரிவித்தார்.

இவ்விலைக்குறைப்பிற்கு பின்னர் ஒப்பத்தொகையான ரூ.7,09,72,438.88 ஆனது 2007–2008ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ஒப்பீடு செய்ததில் ஒப்ப சதவீதம் (+) 87.50 % ஆகும். 2008–2009ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி ஒப்ப சதவீதம் (+) 59.59%, ஜுன்–2008ஆம் நாளைய சந்தை விலை விவரப்படி (+)34.91% ஆகும்.

இவ்விவரங்கள் 05.08.2008 அன்று நடந்த ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஒப்பக்குழுமம் விவரங்களை ஆய்வு செய்தும் இதே போன்ற பிற பணிகளுக்கும் மற்ற துறைகளாலும் வழங்கப்பட்ட ஒப்ப தொகைகளை ஒப்பிட்டு பார்த்தும் மேற்பார்வை பொறியாளர்(பாலங்கள்) அவர்களை இப்பணியின் ஒப்பந்ததாரரிடம் மேலும் விலை குறைப்பு செய்திட பேச்சுவார்த்தை நடத்துமாறு கேட்டுக்கொண்டது.

திருவாளர்கள். சுபாஷ் பிராஜக்ட்ஸ் அண்டு மார்கெட்டிங் லிட் அவர்களிடம் மீண்டும் விலைக்குறைப்பு கோரப்பட்டது. அவர்கள் தங்களுடைய 08.09.2008 மற்றும் 20.09.2008 நாளிட்ட கடிதங்கள் மூலம் மேலும் விலை குறைப்பு செய்திட மறுத்து விட்டனர்.

இதனிடையே இப்பணியை மேற்கொள்ளும் பொருட்டு கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவை மூடிட போக்குவரத்து காவல் துறையிடம் அனுமதி கோரப்பட்டது. காவல் துறை கூடுதல் ஆணையர்(போக்குவரத்து) அவர்கள் தனது 06.10.2008 நாளிட்ட கடிதத்தில் "கத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் காக்ரேன் பேசின் சாலை சந்திப்பில் உள்ள இரயில்வே சந்திக்கடவில் மேம்பாலம் கட்டுவதால் இங்கே வாகன போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் இப்பகுதியில் உள்ள வாகன உபயோகிப்போர் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இந்நிலையில் தியாகப்பா தெருவையும், கண்ணன் தெருவையும் இணைக்கும் கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவை மூடிவிட்டால் வாகன உபயோகிப்போரும் பொதுமக்களும் மேலும் சிரமத்திற்கு உள்ளாவார்கள். எனவே, மேற்கூறிய காரணங்களால் கத்திவாக்கம் நெடுஞ்சாலை–காக்ரேன் பேசின் சாலை மேம்பாலப் பணி முடிந்தபிறகே கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவை மூடுவதை பரிசீலிக்க இயலும்" என்று தெரிவித்துள்ளார்.

இவ்விவரங்கள் 25.11.2008 அன்று நடைபெற்ற ஒப்பக்குழும கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விவரங்களை ஆய்வு செய்த ஒப்பக்குழுமம் ஒப்பந்ததாரரிடம் மேலும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பத்தை செல்லத்தக்க நிலையில் வைத்திருக்க கேட்கும்படி பரிந்துரைத்தது. மேலும், கத்திவாக்கம் நெடுஞ்சாலை–காக்ரேன் பேசின் சாலை பாலப் பணியின் நிலையையும் பாலப்பணி ஆரம்பிக்க கூடிய நாளையும் தெரிவிக்கும்படியும் இதன் மூலம் கொருக்குப்பேட்டை சுரங்கப்பாதை பணியிடத்தை ஒப்பந்ததாருக்கு எப்போது கொடுக்க இயலும் என்பதையறிந்து இவ்வொப்பம் குறித்து முடிவெடுக்கலாம் என்றும் தெரிவித்தது.

கத்திவாக்கம் நெடுஞ்சாலை காக்ரேன் பேசின் சாலை பணியிடத்தில் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் தங்களது 300மி.மீ விட்டமுடைய கழிவு நீர் குழாய்களை தற்போது மாற்றி வருகிறது. 250 மி.மீ. கழிவு நீர் குழாய்களையும், 100 மி.மீ., 150 மி.மீ மற்றும் 750 மி.மீ விட்டமுடைய குடிநீர் குழாய்களை மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. இக்குழாய்கள் மாற்றியமைக்கப்பட்ட பிறகே மேம்பாலத்தின் ஆழ்துளை கடைக்கால்கள் அமைக்கும் பணி தொடங்க இயலும். இம்மேம்பாலப் பணி அக்டோபர் 2009ல் முடிக்க திட்டமிடப்பபட்டுள்ளது.

சுரங்கப்பாதை ஒப்பத்தின் செல்லத்தக்க நிலை 26.12.2008ல் முடிவடைவதால் ஒப்பம் செல்லத்தக்க நிலையை மேலும் 6 மாதத்திற்கு நீட்டி கொடுக்கும்படி ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் இன்று வரை ஒப்பந்ததாரரிடம் பதில் பெறப்படவில்லை.

இதனிடையே 12.12.2008 அன்று இரயில்வே அதிகாரிகளுடன் பணியிடத்தில் ஒரு கூட்டாய்வு நடத்தப்பட்டது. ஆய்வுக்கு பிறகு இரயில்வே துறையிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் "சுரங்கப்பாதையின் சாய்வு சாலையை அமைக்க சென்னை மாநகராட்சிக்கு தருவதாக இருந்த இரயில்வே இடத்தில் கூடுதல் இருப்பு பாதை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்காக கட்டப்பட்டுள்ள மேல் நிலை மின்சார கம்பங்களும் இணைப்பு பெட்டிகளும் இரயில்வே சுற்றுச்சுவருக்கு அருகிலேயே அமைக்கப்பட்டு விட்டதால் மாநகராட்சிக்கு தருவதாக இருந்த நிலம் தரகூடிய நிலையில் இல்லை. மேலும், இரயில்வே பகுதியில் கட்டப்படும் சுரங்கப்பாதை பகுதி தியாகப்பா தெருவிலிருந்து நேர் ஒழுங்கிலும் பிறகு கண்ணன் தெருவிற்கு 25 மீ அரை விட்டத்தில் வளைவாக அமையும். மேலும், வளைவு பகுதியின் அகலம் 4.5மீட்டரிலிருந்து 5.மீட்டராக அதிகரிக்கும்'' என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் அனுமதி பெறப்பட்ட சுரங்கப்பாதை ஒழுங்கு இரயில்வே துறையின் தேவைகளுக்கேற்ப மாற்றப்பட வேண்டும். இதற்கு மாற்று திட்டம் தயாரிப்பதும் கண்ணன் தெருவில் புதிதாக நிலங்களும் கையகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நீண்ட காலமாகுமென்பதால், இச்சூழ்நிலையில் தற்போதைய ஒப்பத்தை ஒப்புக்கொள்ளத்தகாத நிலை ஏற்படுகிறது. மேலும், ஒப்பக் கூறுகளில் விலையேற்றத்தை ஈடுசெய்யும் (Escalation ) கூறும் உள்ளது. இவ்விலையேற்ற ஈடுசெய்தல் ஒப்பம் திறந்த நாளிலிருந்து வழங்கப்பட வேண்டும். ஒப்பந்ததாரருக்கு பணியிடத்தை வழங்குவதில் நீண்ட கால தாமதல் ஏற்படுமேயானால் அவருக்கு மிகப் பெரிய விலையேற்ற ஈடு செய்தல் தொகையை வழங்க வேண்டி வரும். கலந்தறிதற்குரியவரிடமிருந்து மாற்று திட்டம் பெறுவதற்கும் அதற்கு இரயில்வே துறை ஒப்புதல் அளிக்கவும் கால அவகாசம் தேவைப்படும். மேற்கூறிய விவரங்கள் 02.01.2009 அன்று நடந்த ஒப்பக்குழும கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விவரங்களை ஆய்வு செய்த ஒப்பக்குழுமம் ஒப்பத்தை ரத்து செய்யவும் மாற்று திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு புதிய ஒப்பம் கோரவும் பரிந்துரைத்தது.

எனவே, ஒப்பக்குழுமத்தின் பரிந்துரையை ஏற்று கொருக்குப்பேட்டை சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு கோரப்பட்ட ஒப்பத்தை ரத்து செய்து மாற்று திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு ஒப்பங்கள் கோர நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.6/2009, நாள்:12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.12/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

இ.பொ.து.ந.க.எண். எம்1/5795A/2008
ஆணையர் அவர்களின் 09.01.2009 நாளிட்ட ஆணை.

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :29/2009 பொருள் எண்: 29

### 12 புதிய ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்தல்

சென்னை மாநகராட்சியில், துப்புரவுப்பணிகளில் மண்டலங்களில் சேகரிக்கும் குப்பைகளை மண்டல குப்பை மாற்று நிலையங்களிலிருந்து ( zonal Transfer Stations) குப்பை கொட்டுமிடத்திற்கு (Dumping Site) எடுத்துச் செல்ல லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த கனரக வாகனங்களின் மூலம் ஒரு நடைக்கு ( Trips) சுமார் 3 முதல் 5 மெட்ரிக் டன் எடையுள்ள குப்பைகள் மட்டுமே எடுத்து செல்ல முடிகின்றது. இதனால், அடிக்கடி குப்பை மாற்று நிலையங்களில் குப்பைகள் அதிகமாக தேக்கம் ஏற்பட்டு துர்நாற்றம் மற்றும் சுகாதார சீர்கேடு உண்டாகிறது. இவற்றை தவிர்க்கும் பொருட்டு மூடப்பட்ட ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் மூலம் குப்பை எடுத்து செல்ல கீழ் வரும் காரணங்களுக்காக வாங்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

1. தற்சமயம் 4 முதல் 5 டன்கள் எடையுள்ள குப்பைகளை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்டுவரும் கனரக வாகனங்களுக்கு பதிலாக, மூடப்பட்ட ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள்( Closed body Haulage Tipper ) மூலம் 9 டன்கள் எடைக்கும் மேலாக குப்பைகளை ஏற்றிச் செல்ல முடியும். ஆகவே ஒரு வண்டியில் கிட்டத்தட்ட இரு மடங்கு அளவு குப்பைகள் ஏற்றிச் செல்ல முடிவதனால் **எரி பொருள் சிக்கனப்படுத்தப்படுகிறது.** மற்றும் இரு கனரக வாகனங்களுக்கு பதிலாக ஒரு ஹாலேஜ் டிப்பர் வாகனம் மட்டுமே பயன்படுத்துவதினால் **ஒரு ஓட்டுநர் ஊதியம் மிச்சப் படுத்த முடியும்.**

2. தற்போது மண்டலங்களில் சேகரிக்கும் குப்பைகள், கனரக வாகனங்கள் மூலம் குப்பை கொட்டும் வளாகத்திற்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படுகின்றன ஆனால் காம்பேக்டர்கள் பயன்படுத்தப்படும் போது குப்பைகள் மண்டல குப்பை மாற்று நிலையங்களில் கொட்டப்படும் போது குப்பை மாற்று நிலையங்கள் விரைவாக நிரம்பி விடுவதைத் தவிர்க்கும் பொருட்டு ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் மூலம் குப்பைகளை எடுத்துச் செல்வதால் **மண்டல குப்பை மாற்று நிலையங்களில் அதிக குப்பைகள் தேங்குவது குறைக்கப்படும்.**

3. தற்சமயம் குப்பைகளை எடுத்துச் செல்லும் கனரக வாகனங்கள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருப்பதால் புதியதாக மாற்றப்பட வேண்டியுள்ளது.

4. ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் பின்புறம் Multi Axle பொருத்தப்பட்டிருப்பதால், குப்பை கொட்டுமிடத்தில் கனரக வாகனங்கள் சேற்றில் அழுந்தி பழுதடைவது தவிர்க்கப்படுகிறது.

5. மூடியுடன் கூடிய இந்த ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் மூலம் குப்பைகள் எடுத்துச் செல்லப்படுவதால், குப்பைகள் சாலைகளில் சிந்துவதால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் சாலைகளின் சீர்கேடு ஆகியன தவிர்க்கப்படுகிறது. மேலும், குப்பைகளை திறந்த லாரிகளில் அனுப்பக் கூடாது என்ற விதி முறையும் கடைபிடிக்கப்படுகிறது.

6. இவ்வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டவுடன் பத்தாண்டுகள் மேலாக பயன்படுத்தப்பட்டு மிகவும் பழுதடைந்த கனரக வாகனங்கள் படிப்படியாக கழிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட நிலையில் 22 எண்ணிக்கைகள் கொண்ட ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் வாங்க தீர்மானிக்கப்பட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 22 எண்ணிக்கைகள் கொண்ட ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் மேற்கண்ட நிதியினை மாற்றி, திடக்கழிவு மேலாண்மைத் துறை நிதியிலிருந்து கொள்முதல் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 2.9.2008 மூலம் அரசின் நிர்வாக ஒப்பளிப்பு பெறப்பட்டது.

**இ.பொ.து.ந.க.எண். எம்1/5795A/2008**

இதன்படி, முதற்கட்டமாக கோரப்பட்ட ஒப்பத்தின்படி, ( M.E.D.C.No.M1/5378/07 Dt: 14.12.2007) பத்து ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் திருவாளர்கள். சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மேலும், இரண்டாம் கட்டமாக கோரப்பட்ட 12 எண்ணிக்கைகளில் ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் கொள்முதல் செய்ய முடிவு எடுக்கப்பட்டு, 17.10.2008 அன்று ஒப்பம் கோரப்பட்டது. இதில், கலந்த கொண்ட இரு தகுதி வாய்ந்த ஒப்பதாரர்களில் திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்கள் ஒரு எண்ணிக்கை ஹாலேஜ் டிப்பர் வாகன விலையாக ரூ.22,10,000/–என குறைந்த விலைப்புள்ளி அளித்தனர். இவ்விலைப்புள்ளியானது முதற்கட்டமாக கொள்முதல் செய்யப்பட்ட ஒரு எண்ணிக்கை ஹாலேஜ் டிப்பர் வாகன விலையான ரூ.18,94,119/–ஐ விட ரூ.3,15,881/– அதிகம் என்பதால், குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள்.அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்தை விலை குறைப்பு செய்யவேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும், அவர்கள் அளித்த விலைப்புள்ளிக்கு ஏதுவாக சான்றுகள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. மூன்று வாரங்களுக்கு மேல் ஆகியும், மேற்கண்ட நிரூபணங்கள் அந்நிறுவனத்திடமிருந்து பெறப்படாமையால் இவ்வொப்பம் ரத்து செய்யப்பட்டு குறுகிய கால மறு ஒப்பம் கோரப்பட்டது. அதன்படி ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு 31.12.2008 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் 1. திருவாளர்கள் அசோக் லேலண்டு நிறுவனம் மற்றும் 2. திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டன. திருவாளர்கள் சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனம் ஒப்ப வைப்பு தொகையை சமர்ப்பிக்காததால் அவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டது.

திருவாளர்கள் அசோக் லேலண்ட் நிறுவனம் தனது ஒப்ப வைப்பு தொகையாக ரூ. 2,04,000/– த்திற்கான வங்கி உத்திரவாதம் சமர்ப்பித்து தகுதி பெற்றிருந்தனர்.

இவ்வொப்பத்தில் தகுதி பெற்ற ஒரே ஒப்பதாரரான திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் அளித்த விலை விவரப்பட்டியல் பின்வருமாறு::–

| வரிசை எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி **திருவாளர்கள்** | ஒரு ஹாலேஜ் டிப்பர் வாகன விலை ரூ. | 12 ஹாலேஜ் டிப்பர் வாகனங்கள் மொத்த விலை ரூ. |
|---|---|---|---|
| 1. | அசோக் லேலண்ட் லிமிடெட், சென்னை | 20,48,000/– | 2,45,76,000/– |

மேலே குறிப்பிட்ட பட்டியலின்படி, ஒரு எண்ணிக்கை ஹாலேஜ் டிப்பர் வாகன விலையான ரூ.20,48,000/– ஆனது ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட ஒரு ஹாலேஜ் டிப்பர் வாகன விலையான ரூ.18,94,119/– விட ரூ.1,53,881/– அதிகம்,

ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட ஒரு ஹாலேஜ் டிப்பர் வாகன விலையான ரூ.18,94,119/– ஆனது, இயந்திரப்பொறியியல் துறையால் கணக்கிடப்பட்ட ரூ.19,80,158/– என்பதை விட குறைவாக இருந்ததை கருத்தில் கொண்டு, 8.4.2008 அன்று நடைபெற்ற ஒப்பக் குழு கூட்டத்தில், ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இயந்திரப் பொறியியல் துறையால் மேற்படி கணக்கிடப்பட்ட தொகையானது நவம்பர் 2007ல் அப்போதைய இரும்பு விலையான ரூ.20/– கி.லோ வீதம் கணக்கிடப்பட்டது. ஆனால், இரும்பின் தற்போதைய விலை ரூ.33.50 ஆகும். அதாவது தற்போதைய இரும்பின் விலை 67.50% அதிகமாகும். ஆயினும், தற்போது கோரப்பட்ட வண்டியின் விலையான ரூ.20,48,000/– ஆனது, இயந்திரப் பொறியியல் துறையால் தற்போதைய இரும்பின் விலையை கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்ட தொகையான ரூ.20,32,586/–யை விட 0.76% மட்டுமே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இதனை கருத்தில் கொண்டு, 7.1.2009 அன்று நடைபெற்ற ஒப்பக் குழு கூட்டத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. திருவாளர்கள்.அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் அளித்த குறைந்த விலைப்புள்ளியான ரூ.20,48,000/–ஆனது, இயந்திரப் பொறியியல் துறையால் கணக்கிடப்பட்ட ஒரு எண்ணிக்கை ஹாலேஜ் டிப்பர் வாகன விலையான ரூ.20,32,586/– ஐ விட 0.76% மட்டுமே அதிகம் என்பதாலும், ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள 10 எண்ணிக்கைகள் ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் இயக்கம் திருப்திகரமாக உள்ளதாலும், இவ்வகை வாகனங்கள் ஏற்கனவே 10 ஆண்டுகளுக்கு மேல் ஓடி கழிவு செய்யும் நிலையில் உள்ள டிப்பர் வாகனங்களை உடனே கழிவு செய்யும் முடியும் என்பதாலும், ஒப்பக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட இச்செலவினத் தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலதன நிதியிலிருந்து கொள்முதல் செய்யவும் பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே,

1. ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 18 கன மீட்டர் கொள்ளவு திறன் கொண்ட எவர் சில்வர் லைனிங் பொருத்தப்பட்ட 12 எண்ணிக்கைகள் ஹாலேஜ் டிப்பர் வாகனங்களின் மொத்த விலையான ரூ.2,45,76,000/––க்கு கொள்முதல் செய்யவும்,

2. திருவாளர்கள் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனம் கேட்டு கொண்டுள்ளபடி ரூ.2,45,76,000/- ஐ முன்பணமாக வழங்கவும்,

3. திருவாளர்கள்அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்திற்கு வாகனம் பதிவு மற்றும் காப்பீட்டு செலவு உள்பட 12 வாகனங்களுக்கு பதிவிற்குப்பின் உரிய சான்றுகள் பெறப்பட்டு அப்போதைய விலையில் வழங்கவும்,

4. மேற்கண்ட இச்செலவினத் தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

5. திருவாளர்கள் அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவீதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றம் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.9/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.16/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/67/2009**
**ஆணையரின் 11.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :30/2009 பொருள் எண் : 30

**சென்னை மாநகராட்சி, ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் திட்டத்திற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் நாளொன்றுக்கு சுமார் 1500 டன் குப்பையும் மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் நாளொன்றுக்கு 1800 டன் குப்பையும் களைகிறது.

இந்த குப்பை கொட்டும் வளாகங்கள் 25 ஆண்டுகளுக்கும் மேலாக குப்பை கொட்ட பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி, ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை(Integrated Solid Waste Processing Facility) பெருங்குடி குப்பைகொட்டும் வளாகத்தில் தனியார் துறையின் பங்கேற்புடன் செயலாக்க திருவாளர்கள். ஹைட்ரோஎர் டெட்டானிக்ஸ்(பிசிடி) என்ற நிறுவனம் அவர்களுடன் உடன்படிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் அவர்களுக்கு திட்ட செயலாக்கத்திற்காக சென்னை மாநகராட்சி 30 ஏக்கர் நிலப்பரப்பும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் நாள்தோறும் 1400 டன் குப்பையும் வழங்கும். இந்த திட்டம் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் (Design, Build, Operate, Maintain and Transfer) அடிப்படையில் செயலாக்கப்படும். ஒப்பந்த காலம் 20 ஆண்டுகளாகும்.

இது போலவே ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் செயல்படுத்த திருவாளர்கள் டெரா பெர்மா பயோடெக்னாலஜீஸ் என்ற நிறுவனம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்ற நிலையில் மன்றத்தீர்மானம் எண்.695/2008, நாள் 30.12.2008 மூலம் ஏற்கப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது.

சென்னை மாநகராட்சி இந்த திட்டத்தின் கீழ் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் தொழில் முனைவோருக்கு திட்ட செயலாக்கத்திற்காக 100 ஏக்கர் நிலப்பரப்பும் நாள்தோறும் 1800 டன் குப்பையும் வழங்கும். இந்த திட்டம் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல்(Design, Build, Operate, Maintain and Transfer) அடிப்படையில் செயலாக்கப்படும். ஒப்பந்த காலம் 20 ஆண்டுகளாகும்.

சென்னை மாநகராட்சிக்கு பெருங்குடியில் குப்பை கொட்ட ஒதுக்கப்பட்ட 200 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்கனவே குப்பைகளால் நிரப்பப்பட்ட நிலப்பரப்பில் 30 ஏக்கர் திருவாளர்கள். ஹைட்ரோஎர் நிறுவனத்திற்கு ஒதுக்கப்படும் நிலப்பரப்பை சீரமைக்கும் திட்டத்தை அவர்களே மேற்கொள்வார்கள். எஞ்சிய நிலப்பரப்பில் குப்பைகளால் நிரப்பப்பட்ட நிலப்பரப்பு சென்னை மாநகராட்சியினால் சீர்செய்யப்பட வேண்டும்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பு திருவாளர்கள். டெரா பெர்மா பயோடெக்னாலஜீஸ் லிமிட்டட் என்ற நிறுவனத்திற்கு, ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல் திட்டத்தை செயல்படுத்த, சென்னை மாநகராட்சி ஒதுக்க வேண்டும். குப்பைகளால் நிரப்பப்பட்ட இந்த நிலப்பரப்பை சீரமைக்கும் திட்டத்தை அவர்களே மேற்கொள்வார்கள். எஞ்சிய நிலப்பரப்பில் குப்பைகளால் நிரப்பட்ட நிலப்பரப்பு சென்னை மாநகராட்சியால் சீர்செய்யப்பட வேண்டும்.

எனவே, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாக நிலப்பரப்பில் பல ஆண்டுகளாக குப்பைகளால் நிரப்பட்ட நிலப்பரப்பை மீட்டு சீரமைக்கும் திட்டத்தை தனியார் மூலம் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல்(Design, Build, Operate, Maintain and Transfer) அடிப்படையில் நிறைவேற்றலாம் என்றும் கருதப்படுகிறது.

இந்த திட்டத்தை செயலாக்க தொழில் முனைவோரை ஒப்பந்தப்புள்ளி முறைகளை பின்பற்றி தேர்வு செய்ய ஆலோசகர்களை நியமிக்க ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேலும் இந்த திட்டத்திற்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பும் பெறுவது அவசியம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகளால் நிரப்பப்பட்ட நிலப்பரப்பினை மீட்டு சீரமைக்கும் திட்டத்தை செயலாக்கவும்,

(2) இந்த திட்டத்தை தனியார் மூலம் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல்(Design, Build, Operate, Maintain and Transfer) அடிப்படையில் செயலாக்கவும்,

(3) இந்த திட்டத்தை செயலாக்க தனியார் தொழில் முனைவோரை உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி முறையினை பின்பற்றி தேர்வு செய்ய ஆலோசகர்களை நியமனம் செய்து கொள்ளவும் (To engage Consultants)

(4) ஆலோசகர்களை தேர்வு செய்ய ஆலோசகர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அழைத்ததற்கு பின்னேற்பு ஆணையும்

(5) மேற்சொன்ன திட்டத்தை செயலாக்க ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டி அரசுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கவும்

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.10/2009, நாள்: 12.1.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.17/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ச.கு.ந.க.எண்.சி1/5694/2007**

**ஆணையரின் 17.12.2008 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :31/2009 பொருள் எண்.31

**சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களின் தொடர் கட்டணம் மற்றும் வழக்கு கட்டணம் உயர்த்துவது – தொடர்பாக**

சென்னை மாநகராட்சி நிலைவழக்குரைஞர்கள் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 18.09.2007 நாளிட்ட விண்ணப்பத்தில் அவர்களது தொடர் கட்டணம் மற்றும் வழக்குக் கட்டணங்கள் அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்களில் பணியாற்றும் நிலை வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படுவது போல் இணையாக கட்டணங்கள் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கீழ்காணும் சிறப்பு அலுவலர் மன்றத் தீர்மானம் எண்441/91, நாள் 21.03.91 மற்றும் சிறப்பு அலுவலர் மன்றத் தீர்மானம் எண்.907/93, நாள் 24.09.93 ன்படி சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களுக்கு தொடர் கட்டணம் மற்றும் வழக்குக் கட்டணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

S.O. COUNCIL RESOLUTION NO.441/91 DATED. 21.03.1991

REVISION OF PAYMENT OF FEES TO LEGAL COUNSELS

Read the following note of the Commissioner dated. 16.03.1991.

At present the Standing Counsels and the Senior Standing Counsel of the Corporation of Madras are paid fees for their appearances in Courts as per the legal practitioners' Fees Rules, 1973 and the High Court Fees Rules 1956 as amended from time to time. In matters where the aforesaid rules do not apply the Standing Counsels and the senior Counsel are paid fees as per the regulations made by the Special Officer- Council in 1982 and subsequently. Other counsels and senior Counsels engaged by the Corporation are also paid fees as per the said regulations. The existing scales of fees payable to legal Counsels as per the said regulations are very low compared to the prevailing costs of professional services. As such, it is necessary to effect an upward revision in the scales of fees payable to the legal counsels engaged by the Corporation of Madras in matters where the legal practitioner's fees rules and the High Court fees Rules have no application. Accordingly the following regulations are proposed:

**REGULATIONS:**

1. Extent of Application: These regulations shall apply to all pending and future matters in regard to payment of fees to the Counsels engaged by the Corporation of Madras.

2. Legal Practitioners' Fees Rules and High Court Fees Rules Shall have application wherever applicable: In the matter of fees payable to the Standing Counsels of the Corporation of Madras, the Legal Practitioners Fees Rules, 1973 and the High Court Fees Rules 1956 as amended from time to time shall have application in all matters to which the said rules apply.

3. Rates of fees for Writ Petitions, Writ Miscellaneous Petitions and Writ Appeals: In Writ Petitions, Writ Miscellaneous Petitions and Wirt Appeals the Standing Counsels shall be paid fees as follows (a) Rs.750/- for each Wirt Petition (b) Rs.150/- for each Writ Miscellaneous Petition and (c) Rs.1,000/- for each Writ Appeal.

4. Rates of fees for matters before the Labour Courts, Tribunals and Quasi-Judicial Forums: In matters before the Labour Courts, Tribunals and Quasi Judicial Forums for which no scales of fees have been specified in the Legal Practitioners' Fees Rules Fees shall be paid to the Standing Counsel at the rate of Rs.100/- for a day's appearance in each case, and the maximum fees payable for a case shall not exceed Rs.500/- regardless of the number of appearances.

5. <u>Rates of fees in Criminal Cases:</u> The Scales of fees payable to the Standing Counsels for appearances in Criminal Cases shall be as follows:-

(a) Rs.50/- for an uncontested case and Rs.500/- for a contested case before any Metropolitan Magistrates' Court, irrespective of the nature of the case, number of appearances and duration of the trial.
(b) Rs.500/- for appearance in any case before a Court of Sessions, an Additional Court of Sessions or Assistant Court of Sessions; and
(c) Rs.750/- for appearance in any criminal matter before the High Court.

6. <u>Terms and conditions for payment of fees:</u> Fees shall be paid to the Standing Counsels in the order of time and subject to the conditions hereinafter stated; a) in suits filed by the Corporation one third of the total fee payable for each suit shall be paid to the Standing Counsel immediately after the institution of the suit, one third after the Commencement of the trial and the balance after completion of the trial.

b) In all appeals, revision petitions, petitions and applications, both original and miscellaneous, filed by the Corporation, one half of the fee payable in each case shall be paid to the standing counsel immediately after filing of such appeal, revision petition, petition or application and the balance of fee shall be paid after the disposal of such appeal, revision petition, petition or application.
c) In all suits filed against the Corporation one fourth of the fee payable in each suit shall be paid to the standing counsel immediately after the filing of the Vakalat, one fourth after filing of the Written Statement one fourth after the Commencement of trial and the balance after the completion of the trial.
d) In all appeals, revisions, petitions and applications both original and miscellaneous, in which the Corporation is arraigned as the respondent/opposite party one third of the fee payable in each case shall be paid to the Standing Counsel immediately after filing of the Vakalat, one third after filing of Counter affidavits or Counter Statement by the Corporation and the balance of fee shall be paid immediately after the disposal of the case.
e) Fees shall not be paid to a standing counsel, if in any matter costs are not awarded by the court for his failure to file list of costs within the stipulated time and the loss to the Corporation arising there from shall be recovered from such Standing Counsel.
f) No Standing Counsel shall be entitled to any fee in any case, which is decided against the Corporation due to any failure on his part in conducting the case, and if such decision results in pecuniary loss to the Corporation, the same shall be recovered from such standing counsel.

7) <u>Scales of fees payable to other counsels and senior counsels:</u> If for any reason, the Corporation of Madras engages in any case a counsel or a senior counsel who is not a Standing Counsel or Senior Counsel of the Corporation, Counsel Fees shall be decided by mutual agreement.

<u>S.O. COUNCIL RESOLUTION NO.907/93 DATED. 24.09.1993</u>

<u>REVISION OF COUNSEL FEES</u>

Read the Commissioner's note dated 03-03-93, stating that Tvl. N.Kannadasan, D.Murugesan, K.V. Subramanian and A.Elango, Standing Counsels ( High Court) in their letter dated. 17.02.93, have stated that the fees fixed at present is very low and that the expenditure involved in miscellaneous matters are on the higherside as on date; that there is no distinction with regard to the retainer fees fixed for the Standing Counsels appearing for City Civil Court, Small Causes Courts and other Courts compared to the Standing Counsels of High Court who have put in a considerable length of experience and expected to handle more important cases and requested to revise the fees that the Special Officer - Council in his resolution No.441/91, dated. 21-3-91, has resolved to fix the rates of fees for Writ Petitions, Writ Miscellaneous Petitions and Writ Appeals as follows:-

a) For each Writ Petition - Rs.750/-
b) For each Writ Miscellaneous- Rs.150/-
c) For each Writ Appeals - Rs.1,000/-

that apart from this, While appointing the Standing Counsels for the Corporation of Madras, the retainer fees has been fix at Rs.1,000/- per month for each Standing Counsel irrespective of the Courts; that as such, the request of the Standing Counsels (High Court) for the revision of their fees is appears to be extremely high when compared to the fees sanctioned in earlier resolution of the Special Officer - Council, and requesting sanction of the Special Officer- Council to revise the fees of the Standing Counsels (High Court) as follows:-

| | | |
|---|---|---|
| Retainer Fee | - | Rs.1,200/- |
| Writ Petition | - | Rs.1,200/- |
| Each Writ Miscellaneous Petition | - | Rs.200/- |
| Appearances fees in Writ Petition (1/3) | - | Rs.400/- |
| Fees at the time of filing counter(1/3) | - | Rs.400/- |
| Writ appeals wherein the Corporation is the respondent | - | Rs.1,500/- |
| Writ appeals wherein the Corporation is appellant | - | Rs.1,500/- |

The present rates may be increased as below:-

| | | Present rate | Increased rate | For Cases Won |
|---|---|---|---|---|
| a) | For each Writ Petition | 750/- | 1000/- | 1,500/- |
| b) | Writ Miscellaneous Petition | 150/- | 200/- | - |
| c) | Writ Appeals | 1000/- | 1200/- | 1,800/- |

While the above rates are for all cases. I would like to give an incentive incase they win the cases for the Corporation. For each case won by the Corporation 50% higher fee may be given only for (a) & (c). I have indicated the higher amount above. The retainer fees may be increased to Rs.1,200/-

**ச.கு.ந.க.எண்.சி1/5694/2007**

மேற்கண்ட தீர்மானம் 15 வருடங்களுக்கு முன்பு பெறப்பட்டது.

இந்நிலையில் தற்போது அமர்த்தப்பட்டுள்ள வழக்குரைஞர்கள் தங்களுடைய கடிதம் நாள் 18.09.2007ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் அனைத்து கட்டணங்களை உயர்த்த கோரி மனு சமர்ப்பித்துள்ளனர்.

எனவே, சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொடர் கட்டணம் (Retainer Fees) மற்றும் வழக்குக் கட்டணங்கள் பிற அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்களில் பணியாற்றும் நிலை வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படுவதைவிட மிகக் குறைவாகவே வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நீதிமன்றங்களில் வழக்கு தொடர்பாக தாக்கல் செய்யப்படும் ஆவணங்களுக்கு நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் செலவினங்கள் பல மடங்குகளாக உயர்ந்துள்ளது. 1993க்கு பிறகு கடந்த பதினைந்து ஆண்டுகளாக மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படும் தொடர் கட்டணம் மற்றும் வழக்கு கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை நிலை வழக்குரைஞர்கள் வழக்கு கட்டணத்தை உயர்த்தி வழங்கும்படி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். எனவே, நிலை வழக்குரைஞர்கள் மேலும் சிறப்பான முறையில் பணியாற்ற தற்போதுள்ள சூழ்நிலை மற்றும் வழக்கு செலவினங்களை ஈடுசெய்வதற்கு கீழ்க்கண்டவாறு தொடர் கட்டணம் மற்றும் வழக்கு கட்டணங்களை திருத்தியமைக்க கருத்துரைக்கப்படுகிறது.

| விவரங்கள் | சென்னை மாநகராட்சியில் வழங்கப்பட இருக்கும் திருத்தப்பட்ட கட்டணங்கள் |
|---|---|
| (1) | (2) |
| **1.மாதாந்திர தொடர் கட்டணம், அனைத்து நிலை வழக்குரைஞர்கள் (Retainer Fees)** | **ரூ.3,000/–** |
| **2. நகர உரிமையியல் நீதிமன்ற வழக்கு கட்டணம் / சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்கள்.** | |
| அ) அசல் வழக்கு (Original Suit)/ மேல்முறையீட்டு வழக்குகள்(Appeal Suit) / Execution Petition / Contempt Petition. | **ரூ.1500/–**<br>**in Three Stages** |
| ஆ) இடைக்கால மனு (Interlocutory Application) | **ரூ.250/–** |
| இ) ஒரு தலைபட்ச தீர்ப்பை நீக்கறவு செய்யும் மனு (Set aside Exparte Petition) / C.M.P. Cases / CMA Cases | **ரூ.500/–** |
| ஈ) சொத்து வரி மேல் முறையீடு வழக்குகள் (MTA Cases) | **ரூ.1500/–**<br>**in Three Stages** |
| உ) சென்னை மாநகராட்சி தொடரும் அசல் வழக்குகள் (OS.) / மேல்முறையீடு வழக்குகள் (Appeal Suit) சிவில் நீதிமன்றம். | **ரூ.1500/– Three Stages + filing expenses** |
| ஊ) கேவியட் மனு (Caveat Petition) அனைத்து செலவுகள் உட்பட | **ரூ.300/–** |
| **3. சிறு வழக்குகள் நீதிமன்றம், தொழிலாளர் நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயங்கள் / மக்கள் நீதிமன்றம் / சட்ட உதவி மையம் / நுகர்வோர் நீதிமன்றம் / தொழிலாளர் ஆணையர் / ஊனமுற்றோர் ஆணையம் / மனித உரிமை ஆணையம் மற்றும் இதர நீதிமன்றங்கள்.** | |
| அ) மேற்குறிப்பிட்ட நீதிமன்ற வழக்குகள் | **ரூ.1500/– in Three Stages** |
| ஆ) இடைக்கால மனு (Interlocutory Application) | **ரூ.250/–** |
| இ) ஒரு தலைபட்ச தீர்ப்பை நீக்கறவு செய்யும் மனு (Set aside Exparte Petition) / C.M.P/ C.M.A Cases ) | **ரூ.500/–** |
| **4. பெருநகர் குற்றவியல் நீதிமன்றங்கள் (M.M.Court)** | |
| அ) நீதிமன்றத்தில் வாதம் செய்யப்படாத வழக்குகள்(Uncontested cases) | இல்லை |
| ஆ) நீதிமன்றத்தில் வாதம் செய்யப்பட வேண்டிய வழக்குகள் | **ரூ.600/–** |

| | |
|---|---|
| இ) குற்றவியல் அமர்வு நீதிமன்றங்கள் முன்தொடர் விசாரணை வழக்குகள் | **ரூ.1,200/–** |
| ஈ) சென்னை மாநகராட்சி தொடரும் உயர்நீதிமன்ற குற்றவியல் வழக்கு | **ரூ.2000/– in Two Stages + Filing Expenses** |
| **5. உயர்நீதி மன்றம்** | |
| அ) ஒவ்வொரு நீதிப் பேராணை வழக்கு ( Single Writ Petition) / நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ( Contempt Petition) | **ரூ.2000/–** **(இரண்டு நிலைகள்)** |
| ஆ) இடைக்கால ஆணை (Interim Injunction/ Stay order) / Miscellanous Petitions ஒவ்வொன்றுக்கும் (each order) | **ரூ.500/–** அதிகபட்சம் ரூ.2000/– |
| இ) தொகுதி வழக்குகள் ( Batch Cases) | முதல் வழக்கிற்கு ரூ.2000/– மீதமுள்ள ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.1000/– அதிகபட்சம் ரூ. 20,000/– |
| ஈ) மேல் முறையீடு வழக்குகள்(Appeal Cases) Writ Appeal | **ரூ.3000/–** |
| உ) சென்னை மாநகராட்சி தொடரும் நீதிப்பேராணை வழக்குகள் ( Writ Petition) ( அனைத்து செலவுகள் உட்பட) | **ரூ2000/– in Two Stages + Expenses** |
| ஊ) சென்னை மாநகராட்சி தொடரும் மேல்முறையீடு (Writ Appeal) வழக்குகள் | **ரூ.3000/– in Two Stages + Expenses** |
| எ) உரிமையியல் வழக்கு (Civil Suit) சென்னை மாநகராட்சி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் உரிமையியல் வழக்கு | Total Fees payable on valuation of suit as per Legal Practioners fee rule and High Court Fee Rule in 2 Stages |
| ஏ) சென்னை மாநகராட்சிக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யும் உரிமையியல் வழக்கு | Total Fees payable on valuation of suit as per Legal Practioners fee rule and High Court Fee Rule in 2 Stages |
| **6. உச்ச நீதிமன்றம் (Supreme Court)** | |
| அ) சென்னை மாநகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு வழக்குரைஞர் **(Advocate on Record)** | 2,500/– per day per hearing |
| ஆ) தொகுதி வழக்குகள் ( Batch Cases) | முதல் வழக்கிற்கு ரூ.2500/– மீதமுள்ள ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.1250/– அதிகபட்சம் ரூ. 20,000/– |
| இ) உச்ச நீதிமன்றத்தில் சென்னை மாநகராட்சி தொடரும் வழக்குகள் | **ரூ.10,000/– in Two Stages + Filing Expenses** |
| **மூத்த வழக்குரைஞர் கட்டணம் Senior Counsel Fees உச்ச நீதிமன்றம் ( Supreme Court)** | **Rs.15000/-** for per day per case. In Batch cases Rs.15000/- per day for first case and 50% of fees at the rate of first case for remaining cases subject to a maximum for **Rs.75000/-** |
| **மூத்த வழக்குரைஞர் கட்டணம் Senior Counsel Fees** **உயர்நீதிமன்றம் ( High Court) மற்றும் இதர கீழ்நிலை நீதிமன்றங்கள் (Subordinate Courts)** | **Rs.15000/-** for per day per case. In Batch cases Rs.15000/- per day for first case and 50% of fees at the rate of first case for remaining cases subject to a maximum for **Rs.60000/-** |

| | |
|---|---|
| **உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்குரைஞர்களுக்கு உதவி செய்யும் அரசு வழக்குரைஞர் கட்டணம் ( Junior Counsel Fees for Supreme Court)** | மூத்த வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படும் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்கு தொகை (அதிகபட்சம் 25,000/–) |
| **உயர் நீதிமன்றம் மற்றும் கீழ்நிலை நீதிமன்றங்களில் மூத்த வழக்குரைஞர்களுக்கு உதவி செய்யும் மாநகராட்சி நிலை வழக்குரைஞர் கட்டணம்( Junior Counsel Fees for High Court and Subordinate Courts)** | மூத்த வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படும் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்கு தொகை (அதிகபட்சம் 20,000/–) |
| **Note :- Fees Paid in Three Stages are (1)Vakalath, Counter Written Statement (2) Trail and (3) Final Order / Decree / Judgement for other than High Court cases.**<br>**Note:- Fess Paid in Two Stages are (1) Vakalath, Counter and (2) Final Order for High Court Cases** | |
| **மேற்குறிப்பிடப்பட்ட இனங்களை தவிர பிற இனங்களுக்கு கட்டணம் வழங்க வேண்டிய சூழ்நிலையில் ஆணையரின் ஆணை பெற்று வழங்கவும்.** | |
| **வக்காலத்து கட்டணம் (** Vakalath Fees):- நிலை வழக்குரைஞர் பணிக்காலம் முடியும் போது அல்லது பணி துறக்கும்போதோ வழக்கு தொடர்பாக எந்தவித கட்டணமும் வழங்காமல் இருந்தால் வக்காலத்து கட்டணமாக ஒரு வழக்கிற்கு ரூ.500/– வீதம் வழங்கவும். | |

மேற்காணும் திருத்திய வழக்கு கட்டணங்கள் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளுக்கு பின்னர் அமுலுக்கு வரும்.

மேற்கண்டவாறு சென்னை மாநகராட்சி நிலைவழக்குரைஞர்களின் மாதாந்திர தொடர் கட்டணம் மற்றும் வழக்கு கட்டணங்கள் திருத்தியமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.01/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ச.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.து.ந.க.எண்.அ1/0025/2009</u>
<u>ஆணையர் அவர்களின் 09.01.2009 நாளிட்ட குறிப்பு</u>

<u>27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :32/2009 பொருள் எண்.32

<u>மன்றத் தீர்மானம் திரும்பபெற அனுமதி</u>

19.02.2004 அன்று நடைபெற்ற சாதாரண மன்றக் கூட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழியை கிழித்ததற்காக, திராவிட முன்னேற்ற கழக அனைத்து உறுப்பினர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள், திரு.சையது மசூது, திரு.ஜபருல்லா, திரு.முகமது யாசின், CPI மற்றும் CPM கட்சிகளை சார்ந்த உறுப்பினர்களை 20.02.2004 நடை பெறயிருந்த மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்காமல் சஸ்பெண்டு செய்யப்பட்டதாதவும் இவர்கள் மீது கண்டன தீர்மானம் கொண்டு வருவதாகவும் அன்றைய மதிப்பிற்குரிய துணை மேயர் (வணக்கத்திற்குரிய மேயர் பொறுப்பு) அவர்களால் 19.02.2004 அன்றைய கூட்டத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்நிலையில் அன்றைய காங்கிரஸ் எதிர்கட்சி தலைவர் திரு.மனோ அவர்கள் அரசிற்கு முறையிட்டும், W.P.No.7817/2004ன்படி வழக்கும் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி நகலினை கிழித்தார்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் முறையான தீர்மான எண், ஆணையர் அவர்கள் குறிப்பு போன்ற எவ்வித முறையான குறிப்புகளும் சமர்ப்பிக்கப்படாமல் அப்போதைய ஆளும் கட்சித் தலைவர் தெரிவித்ததின் அடிப்படையில் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டது. இது தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் திரும்பப்பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி2/2821/2008
ஆணையர் அவர்களின் 09.01.2009 நாளிட்ட குறிப்பு

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :33/2009 பொருள் எண்:33

### நவீன தானியங்கி கார் நிறுத்த வசூல் பெட்டகம் அமைத்தல்

சென்னை மாநகரில் வியாபார முக்கியத்துவம் உள்ள சாலைகள், பிரதான கோயில்கள் உள்ள சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் அருகாமையில் உள்ள சாலைகளில் போக்குவரத்து காவல்துறையின் அனுமதியுடன் கார் நிறுத்தங்கள் (Car Parking) அமைத்து தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல கழகத்தின் மூலமாக (Tamil Nadu Ex-serviceman Welfare Corporation Limited) பொதுமக்களிடம் வசூல் செய்து சென்னை மாநகராட்சியுடன் வருவாயை பகிர்ந்து வருகிறது.

தற்பொழுது பெங்களூர், ஹைதராபாத் போன்ற நகரங்களில் முக்கிய சாலைகளில் நவீன தொழில்நுட்பத்துடன் தானியங்கி வசூல் பெட்டகங்கள் அமைத்து அதன் மூலம் கார் நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இத்திட்டம் மாநகராட்சி மற்றும் தனியார் பங்களிப்புடன் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கார் நிறுத்தம் திட்டம் சாலையோர கார் நிறுத்தத்தை ஒழுங்கு முறைப்படுத்தவும், வாகனங்களின் போக்குவரத்தை சீரமைக்கவும் மற்றும் சாலையோர கட்டமைப்பு வசதியை மேம்படுத்தவும் உதவும். இத்திட்டத்தை மாநகராட்சி மற்றும் தனியார் பங்கேற்பின் மூலம் நிறைவேற்ற மாமன்றம் 27.08.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (தீர்மான எண்.416/08) இத்திட்டம் தனியார் பங்கேற்பின் மூலம் செயல்படுத்த இருப்பதால் சென்னை மாநகராட்சிக்கு செலவினம் ஏதும் இல்லாமல் இருப்பதுடன் சென்னை மாநகராட்சிக்கு வருவாயும் கிடைக்கும் எனக்கருதப்படுவதாலும் கீழ்காணும் இடங்களில் கட்டுதல், இயக்குதல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற முறையில் நவீன தானியங்கி கார் நிறுத்த வசூல் பெட்டகம் அமைக்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டன.

1. 3–வது நிழற்சாலை அண்ணாநகர் (கந்தசாமி கல்லூரி எதிரில்)
2. சாந்தி காலனி (சுந்தரம் மெடிகல் பவுண்டேசன் அருகில்)
3. 2–வது நிழற்சாலை, அண்ணாநகர் (தெற்குபக்கம்)
4. புரசைவாக்கம் நெடுஞ்சாலை (குளம் அருகில்)
5. 3–வது நிழற்சாலை, அண்ணாநகர்
6. ஜெனரல் பேட்டர்ஸ் சாலை
7. மைலாப்பூர் (வடக்குமாட வீதி)
8. பாண்டிபஜார் (தி.நகர்)
9. பாண்டிபஜார் எதிர்புறம்
10. சி.எஸ்.ஐ.ஆர். ரோடு (அசண்டாஸ் அருகில்)
11. காந்தி நகர் (சர்தார் பட்டேல் ரோடு)
12. ஒயிட்ஸ் ரோடு

ஒப்ப நிபந்தனைகளின் படி சுமார் 78 எண்ணிக்கை பெட்டகங்களை மேற்கூறிய 12 இடங்களில் நிறுவவும் 7 வருட சலுகை காலத்திற்குப் பின் சென்னை மாநகராட்சி வசம் அந்த தானியங்கி வாகன நிறுத்த வசூல் பெட்டகங்களை ஒப்படைக்க வேண்டும்.

ஒப்பந்ததாரர், ஒப்ப நிபந்தனைகளின்படி பொதுமக்களிடமிருந்து கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வாகன நிறுத்துக் கட்டணம் வசூலிக்க வேண்டும். வசூலாகும் தொகையினை ஒப்பந்ததாரரும் சென்னை மாநகராட்சியும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

| வாகன நிறுத்தும் நேரம் | நான்கு சக்கர வாகன நிறுத்து கட்டணம் |
|---|---|
| 1 மணி நேரத்திற்கு | ரூ.5.00 |
| 2 மணி நேரத்திற்கு | ரூ.10.00 |
| 3 மணி நேரத்திற்கு | ரூ.15.00 |

ஒரே இடத்தில் 3 மணி நேரத்திற்கு மேல் வாகனங்கள் நிறுத்துவதை தவிர்ப்பதற்காக மூன்று மணி நேரத்திற்குப் பின் ஒவ்வொரு மணிக்கும் ரூ.10/– வாகன நிறுத்து கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும்.

ஒப்ப இறுதி நாளான 28.11.08 அன்று கீழ்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன.

<u>பே.சா.து.ந.க.எண்.பி2/2821/2008</u>

1. திருவாளர்கள் மில்லினியம் சினர்ஜி பிரைவேட் லிமிடெட் , பெங்களூர்
2. திருவாளர்கள் ஸ்மார்ட் பார்க்கிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை

மேற்கூறிய ஒப்பந்ததாரர்களின் முன் தகுதி ஒப்பங்களை ஆய்வு செய்ததில் திருவாளர்கள் ஸ்மார்ட் பார்க்கிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் முன் தகுதி பெறவில்லை. எனவே அவர்களின் விலைப்புள்ளி ஒப்பம் திறக்கப்படவில்லை. திருவாளர்கள் மில்லினியம் சினர்ஜி பிரைவேட் லிமிடெட் , பெங்களூர், கீழ்காணும் ஒப்பப்புள்ளியினை அளித்திருந்தார்கள்.

| வ.எண். | ஒவ்வொரு மாதமும் வசூலாகும் தொகையில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்கு | ஒவ்வொரு மாதமும் வசூலாகும் தொகையில் ஒப்பந்ததாரர் அடைய வேண்டிய பங்கு |
|---|---|---|
| 1 | 7.50 சதவீதம் | 92.50 சதவீதம் |

பேச்சு வார்தைக்குப்பின் திருவாளர்கள் மில்லினியம் சினர்ஜி பிரைவேட் லிமிடெட் , நிறுவனம் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்கினை 7.50 சதவீதத்திலிருந்து 11.50 சதவீதமாக உயர்த்தியது. இவ்வொப்பத்திற்கு அனுமதி அளிக்க 16.12.08 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, திருவாளர்கள் மில்லினியம் சினர்ஜி பிரைவேட் லிமிடெட், பெங்களூர் நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்கான 11.50 சதவீதத்தை ஒவ்வொரு மாதமும் வசூலாகும் தொகையிலிருந்து செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் கட்டுதல், இயக்குவதல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற முறையில் நவீன தானியங்கி கார் நிறுத்த வசூல் பெட்டகம் அமைக்கும் பணியினை அளிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.15/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.09/2009, நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இப்பொருளினை ஆய்வு செய்து சில நிபந்தனைகளுடன் வழங்கலாம் என்று மன்றம் தீர்மானிக்கின்றது".

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :34/2009 பொருள் எண்: 34

**அடுக்குமாடி நவீன தானியங்கி வாகன நிறுத்தம் அமைத்தல்**

சென்னை மாநகரில் பெருகிவரும் வாகனங்களால், வாகனங்கள் நிறுத்துவதற்கு இடமின்மை ஏற்பட்டுள்ளது, இதை போக்கும் வகையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–7, கோட்டம்–109, வேலஸ் தோட்டம் முதல் தெருவில் (அப்போலோ மருத்துவமனை அருகில்) வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல், பின்ஒப்படைத்தல் (DBOT) என்ற அடிப்படையில் கட்டும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டன.

ஒப்ப நிபந்தனைகளின்படி 200 எண்ணிக்கை நான்கு சக்கர வாகனங்களும் 290 எண்ணிக்கை இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்காக வடிமைக்க வேண்டும் ஒப்பந்ததாரருக்கு மனை பரப்பளவில் (2497 சதுர மீட்டர்) ஒன்றரை மடங்கு அளவிலான தள பரப்பு வணிக பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்படும். இப்பணியை இரண்டு வருட காலத்திற்குள் முடிக்க வேண்டும். மேலும் 18 ஆண்டுகள் சலுகை காலமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச சலுகை கட்டணமாக ஆண்டிற்கு ரூ.45 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வாகனம் நிறுத்து கட்டணம் கீழ்காணும் அட்டவணையில் உள்ளபடி பொதுமக்களிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

| வாகன நிறுத்தும் நேரம் | நான்கு சக்கர வாகனம் | இரு சக்கர வாகனம் |
|---|---|---|
| 1 மணி நேரத்திற்கு | ரூ.20 | ரூ.5 |
| 2 மணி நேரத்திற்கு | ரூ30 | ரூ.10 |
| 3மணி நேரத்திற்கு | ரூ.40 | ரூ.15 |
| 4 மணி நேரத்திற்கு | ரூ.50 | ரூ.20 |
| 5 மணி நேரத்திற்கு | ரூ60 | ரூ25 |
| 6 மணி நேரத்திற்கு | ரூ70 | ரூ.25 |
| 7 மணி நேரத்திற்கு | ரூ.80 | ரூ.25 |

நான்கு சக்கர வாகனத்திற்கான மாதாந்திர கட்டணம் ரூ.1500/–
இரண்டு சக்கர வாகனத்திற்கான மாதாந்திர கட்டணம் ரூ.500/–

முதலில் கோரிய ஒப்பந்தப்புள்ளியில் எந்த ஒரு ஒப்பந்ததாரரும் பங்கேற்கவில்லை. பின்னர் மறுஒப்பம் கோரப்பட்டதில் ஒப்ப இறுதி நாளான 12.11.2008 அன்று திருவாளர்கள் மார்க் லிமிடெட் (M/s. Marg Limited ) மற்றும் அப்போலோ ஆஸ்பிட்டல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட் (M/s. Apollo HospitalsEnterprises Limited) அவர்களின் கூட்டமைப்பிலிருந்து (Consortium) ஒரே ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அவர்களின் முன்தகுதி மற்றும் தொழில்நுட்ப ஒப்பங்கள் ஒப்ப மேலாண்மை செய்ய நியமிக்கப்பட்ட கலந்தறிபவர்களான திருவாளர்கள் கிரிசில் ரிஸ்க் அண்டு இன்பராஸ்டெரக்சர் சோலியூஷன்ஸ் லிமிடெட் (M/s. CRISIL Risk and Infrastructure Solutions Limited) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி ஒப்பம் 31.12.2008 அன்று திறக்கப்பட்டது. திருவாளர்கள் மார்க் லிமிடெட் (M/s. Marg Limited ) மற்றும் அப்போலோ ஆஸ்பிட்டல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட் (M/s. Apollo HospitalsEnterprises Limited) அவர்களின் கூட்டமைப்பு (Consortium) ரூ.45,09, 009/– யை சலுகை கட்டணமாக அளித்திருந்தார்கள். பேச்சுவார்த்தைக்குப்பின் இறுதி சலுகை கட்டணத்தை ரூ.46,00,000/–க்கு உயர்த்தி அளித்துள்ளார்கள். இந்த சலுகை கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் 18 வருடங்களுக்கு 5 சதவீதம் கூட்டு எண்ணிக்கையில் உயர்த்தி தர வேண்டும். இவ்வொப்பத்திற்கு அனுமதி அளிக்க 07–01–2009 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, திருவாளர்கள் மார்க் லிமிடெட் (M/s. Marg Limited ) மற்றும் அப்போலோ ஆஸ்பிட்டல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட் (M/s. Apollo Hospitals Enterprises Limited) அவர்களின் கூட்டமைப்பிற்கு (Consortium) மண்டலம் – 7 கோட்டம் –109, வேலஸ் தோட்டம் முதல் தெருவில் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் தானியங்கி அடுக்குமாடி வாகன நிறுத்தம், சலுகை கட்டணமான ரூ.46,00,000/– த்திற்கு கட்டுமானம் செய்யும் காலமான இரண்டு வருட காலத்திற்குப்பின் சலுகை காலமான 18 வருடங்களுக்கு 5 சதவீதம் கூட்டு எண்ணிக்கையில் உயர்த்தி தர, இப்பணியினை அளிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.17/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.10/2009, நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"எதிர்கட்சி தலைவர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் சலுகை கட்டணம் முழுவதையும் ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பத்திலேயே செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி3/2422/2008
ஆணையர் அவர்களின் 06.01.2009 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :35/2009 பொருள் எண்: 35

**விக்டோரியா பப்ளிக் ஹால் புதுப்பிக்கும் பணி – கலந்தறிக்கட்டணம் நிர்ணயம் செய்தல்**

ஈ.வே.ரா. பெரியார் சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான விக்டோரியா பப்ளிக் ஹால் (V.P. HALL) 1887ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இதை முழுவதுமாக புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டு, இதன் கட்டடக் கலை மற்றும் கலையம்சத்தை பேணிக்காக்கும் வகையில் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

விக்டோரியா பப்ளிக் ஹால் (V.P. HALL ) புதுப்பிக்கும் நடவடிக்கையாக கீழ்க்கண்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தொழில்நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1. தலைமை பொறியாளர் (க(ம)பா), சென்னை மாநகராட்சி
2. சூபரின்டெண்டிங் ஆர்கியாலஜிஸ்ட், (Superintending Archaeologist, ASI Chennai Circle)
3. மேற்பார்வை பொறியாளர் (கட்டடத்துறை) சென்னை மாநகராட்சி

மேற்கண்ட விக்டோரியா பப்ளிக் ஹால் (V.P. HALL) கட்டடக்கலை மற்றும் கலையம்சத்தை பேணிக்காக்கும் வகையில் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதால், இப்பணிக்கு குறைந்த பட்சம் 5 வருடங்கள் முன் அனுபவமுள்ள பேணுகை கட்டடக் கலைஞர் (Conservation Architect) தெரிவு செய்ய ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டு, 11.07.2008 நாளிட்ட “THE HINDU“ ஆங்கில நாளிதழில் மூலம் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு, இதற்கான கடைசி நாளான 08.08.2008 அன்று கீழ்கண்டவர்களிடமிருந்து இரண்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

1. M/s.KSHETRA CONSERVATION ARCHITECTS)
2. M/s. ASHISH V TRAMBADIA CONSERVATION ARCHITECTS

மேற்கண்ட இரண்டு விண்ணப்பதாரர்களும் 21.10.2008 அன்று விக்டோரியா பப்ளிக் ஹால் (V.P. HALL ) தொழில்நுட்ப குழுவின் முன் தங்கள் அனுபவங்களின் விவரங்களை பவர்பாயிண்ட் மூலம் அறிமுகப்படுத்திக்கொண்டனர். இதனடிப்படையில் உறுப்பினர்கள் அளித்த மதிப்பீடுகளின்படி திருவாளர்கள். ஷேத்ரா கண்சர்வேஷன் ஆர்கிடெக்ட்ஸ் (M/s. KSHETRA CONSERVATION ARCHITECTS) அவர்கள் விக்டோரியா பப்ளிக் ஹால் (V.P. HALL) புதுப்பித்தல் பணிக்கான பேணுகைக் கட்டடக்கலைஞராக (Conservation Architect) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு ஆணையர் அவர்களின் ஒப்புதல் 20.11.2008 அன்று பெறப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேணுகை கட்டடக் கலைஞர் திருவாளர்கள்.ஷேத்ரா கண்சர்வேஷன் ஆர்கிடெக்ட்ஸ் (M/s. KSHETRA CONSERVATION ARCHITECTS) அவர்களை மேற்கண்ட பணிக்கான கலந்தறிக்கட்டண விவரங்களை அளிக்கும்படி கேட்டுக்கொண்டதில், பேச்சுவார்த்தைக்குப்பின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 3.80 விழுக்காடு கலந்தறிக்கட்டணமாக அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள் மற்றும் செலுத்தவேண்டிய கலந்தறிக்கட்டண அட்டவணை விவரங்கள் கீழ்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | To Prepare a Preliminary Survey Report, Data Collection, Presentation. | - | 5% |
| 2. | Detailed surveys, Preparing conservation plans & Methodology, Presentation. | - | 10% |
| 3. | Preparation of detailed specifications based on ASI Standards | - | 10% |
| 4. | Preparation of Estimates | - | 10% |
| 5. | Preparation of Tender Document to call for bid with proper Technical pre-qualification of bidders. | - | 5% |

6. Finalisation of Tender - 10%
7. During the Commencement & execution - 30%
8. Final Stage of Completion of work - 20%

எனவே, விக்டோரியா பப்ளிக் ஹால் (V.P. HALL) கட்டடத்தை புதுப்பித்தல் பணிக்காக திருவாளர்கள்.ஷேத்ரா கண்சர்வேஷன் ஆர்கிடெக்ட்ஸ் (M/s. KSHETRA CONSERVATION ARCHITECTS) அவர்களை பேணுகை கட்டடக் கலைஞராக தெரிவு செய்யவும் மற்றும் இவருக்கு பணியின் மொத்த மதிப்பீட்டுத்தொகையில் **3.80** விழுக்காடு கலந்தறிக்கட்டணமாக மேற்கண்ட அட்டவணைப்படி வழங்கிடவும் நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**12.1.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**3/2009**, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**13.01.2009** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**20/2009** , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>க.து.ந.க.எண்.பி5/3363/2007</u>

<u>ஆணையர் அவர்களின் 10.01.2009 நாளிட்ட குறிப்பு</u>

<u>**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**</u>

தீர்மான எண் :36/2009 பொருள் எண். 36

<u>**ஒப்பந்தப்புள்ளி ஏற்க அரசின் ஒப்புதல் பெற அனுமதி**</u>

சென்னை மாநகராட்சியின் 2008–2009 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தொடக்க உரையில், தென் சென்னை மக்களின் தேவையை நீண்டகால கனவினை நிறைவு செய்யும் வகையில் அண்ணாநகர் தொகுதிக்கு உட்பட்ட செனாய் நகரில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்திலும் மற்றும் வடசென்னை பேசின்பாலச் சாலையிலும் நவீன குளிர்சாதன வசதியுடன்கூடிய 1200 இருக்கைகள் கொண்ட இரண்டு கலையரங்கங்கள் கட்டப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, முதற் கட்டடமாக, குளிர்சாதன வசதியுடன் கூடிய கலையரங்கம் கட்டும் பொருட்டு நில அளவை (Survey) செய்ததில், மத்திய சென்னையில் மண்டலம்–5 வார்டு – 67 செனாய் நகர் 8வது குறுக்குத்தெருவில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடம் கலையரங்கம் கட்டுவதற்கு உகந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை வடிவமைப்பு செய்வதற்கான பணி கட்டட எழில் கலைஞர் திருவாளர்கள்.ஆஸ்கார் கன்சசாவோ இன்டர்நேஷனல் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 12.12.2008 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இதில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையால் இவர்களின் Price Bid 16.12.2008 அன்று திறக்கப்பட்டன. இதன் விவரங்கள் கீழ் வருமாறு.

| வ.எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2008-2009 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஸ்ரீபதி அசோசியேட்ஸ் | ரூ.7,96,05,645.07 | ரூ.15,05,72,295.00 | (+)89.15% அதிகம் |
| 2 | திருவாளர்கள்ஆர்.பி.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். | ரூ.7,96,05,645.07 | ரூ.14,59,12,000.00 | (+)83.29% அதிகம் |

இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். அவர்களின் ஒப்பத்தொகை ரூ.14,59,12,000.00 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் விலை விவரப்படி அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.7,96,05,645.07யைவிட (+)83.29% அதிகமாகும். எனவே, ஒப்பந்ததாரர் திருவாளர்கள்ஆர்.பி.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். அவர்களுடன் 24.12.2008 அன்று நடத்திய இரண்டாம் முறை பேச்சுவார்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.10,28,71,704.00 ஆகும். இது 2008–09ஆம் ஆண்டின் விலைவிவரப்படி அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.7,96,05,645.07யைவிட (+)29.23% அதிகமாகும். மேலும் நடப்பு சந்தை விலைகளுடன் (The Hindu Property Plus dated 20.12.2008)வுடன் ஒப்பிடுகையில் இவரது ஒப்பவிழுக்காடு (+)10.36% அதிகமாகும்.

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பங்கள் 06.01.2009 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு இதற்கு பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியின் ஒப்பத்தொகையானது ரூ.10.00 கோடிக்கு மேல் உள்ளதால் இவ்வொப்பத்தை ஏற்க அரசின் அனுமதி பெறப்பட வேண்டும்.

க.து.ந.க.எண்.பி5/3363/2007

எனவே,

1. பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்ஆர்.பி.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். அவர்களின் ரூ.10,28,71,704.00 (ரூபாய் பத்து கோடியே இருபத்தெட்டு இலட்சத்து எழுபத்தொண்றாயிரத்து எழுநூற்றி நான்கு மட்டும்)க்கான அதாவது 2008-2009 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)29.23% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை அவர்களுக்கு அளிக்க அனுமதியும் மற்றும்

2. மேற்கண்ட பணியின் ஒப்பத்தொகை ரூ.10.00 கோடிக்கு மேல் உள்ளதால் இதற்கு அரசின் ஒப்புதல் பெற அரசிற்கு கடிதம் அனுப்ப அனுமதியும் வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

12.1.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.16/2009, நாள்: 12.1.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.21/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இனம் 2ல் தெரிவித்துள்ளப்படி அரசின் ஒப்புதல் வேண்டி என்பதற்கு பதிலாக அரசு கடித எண்.(எம்.எஸ்).155, நாள்.15.11.2007, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அளித்துள்ள விளக்கத்தின்படி மன்றத்தின் அனுமதியே போதுமானது என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.ஜி1–47707–2008**
**ஆணையரின் 5.1.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :37/2009 பொருள் எண்.37

**டோபிகானா பயன்பாட்டுத் தொகை நிர்ணயித்தல்**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.292ன்படி, துணிகளை துவைக்க தனி இடத்தினை ஒதுக்க ஏற்பாடுகளை சென்னை மாநகராட்சி செய்திட வேண்டும். இச்சட்டப் பிரிவின்படி, சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் டோபிகானா என்று அழைக்கப்படும் துணிகளை துவைக்கும் இடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் துணி துவைக்கும் கல் மற்றும் துவைக்கின்ற துணிகளை இஸ்திரி (Iron) செய்ய தனியே அறைகளும் கட்டப்பட்டுள்ளன.

துவைத்த துணிகளை இஸ்திரி செய்ய தற்போது மின்சார சாதனங்கள் (Iron box) உபயோகிக்கப்படுவதால், இவ்விடங்களுக்கு சென்னை மாநகராட்சியால் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி துணிகள் துவைக்கும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள துணி துவைக்கப் பயன்படுத்தப்படும் கல்களை பயன்படுத்திக் கொள்ள ஒவ்வொரு மண்டலங்களிலும் ஒவ்வொரு விதமாக தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கல்லுக்கு குறைந்த பட்சம் ரூ.6.00 என்றும், அறைகளுக்கு குறைந்தபட்சம் ரூ.50.00 என்றும் மாத பயன்பாட்டுத் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி இடங்களில் துவைத்த துணிகளை இஸ்திரி செய்ய மின்சாதனங்கள் பயன்படுத்தப்படுவதால் ஆகும் மின்சாரக் கட்டணமானது,

1) ஒரு சில இடங்களில் பயன்பாட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியால் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

2) ஒரு சில இடங்களில் பயன்பாட்டாளர்களே ஒன்று சேர்ந்து மின்சாரத் தொகையினை வசூலித்து மின்சார வாரியத்திற்கு செலுத்திவருகிறார்கள்.

3) ஒரு சில இடங்களில் சென்னை மாநகராட்சியிடமிருந்து ஆட்சேபணையின்மையினை பெற்று பயன்பாட்டாளர்கள் நேரடியாக மின்சார வாரியத்திடமிருந்து இணைப்புகளைப் பெற்று, மின் கட்டணத்தினை நேரடியாக மின்சார வாரியத்திற்கு செலுத்திவருகின்றனர்.

இவ்வாறு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு கல் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டும், வெவ்வேறு இடங்களில் ஒவ்வொரு விதமாக மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டு வருவதால் ஏற்படும் சிக்கல்களைக் களைய, இந்நிகழ்வில் ஒரே மாதிரியான ஏற்பாடுகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண், 292(1)ல், துணிகளை துவைக்கும் இடத்தினை பயன்படுத்திக்கொள்ள வரிவிதிப்பு மற்றும் நிதி நிலைக்குழுவால் நிர்ணயம் செய்யப்படும் தொகையினை நிர்ணயம் செய்ய வழி வகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1) அனைத்து மண்டல அலுவலகங்களில் உள்ள டோபிகானா என்று அழைக்கப்படும் துணிகள் துவைக்கும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கல் மற்றும் அறைகளை பயன்படுத்திக் கொள்ள 1.4.2009 முதல் கீழ்கண்டவாறு ஒரே மாதிரியாக தொகையினை நிர்ணயம் செய்யவும்,

| வரிசை எண். | விவரம் | கட்டணம் |
|---|---|---|
| 1 | கல் கட்டணம் | நாள் ஒன்றுக்கு கட்டணம் ரூ.3.00 |
| 2 | அறைக் கட்டணம் | மாதம் ஒன்றுக்கு ரூ.50.00 |

**வ.து.ந.க.எண்.ஜி1–47707–2008**

2) மேற்படி தொகையினை 3 வருடத்திற்கு ஒரு முறை 50 விழுக்காடு உயர்த்தி நிர்ணயம் செய்திடவும்,

3) சென்னை மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையினை பெற்ற பின்னர், மேற்படி இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அறைகளுக்கான மின் இணைப்பினை பயன்பாட்டாளர்கள் நேரடியாக மின்சார வாரியத்திடமிருந்து அவர்களது பெயரிலேயே பெற்றுக் கொண்டு (மோட்டாருக்கான கட்டணத்தினையும் சேர்த்து) மின்கட்டணத்தினை நேரடியாக மின்சார வாரியத்திற்கு செலுத்தக் கோரிடவும், நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.06/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் கல் கட்டணம் குறைப்பது குறித்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மறு பரிசீலனை செய்து மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்க மன்றம் தீர்மானிக்கின்றது".

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.ஜி1—15592—07
ஆணையரின் 5.1.2009 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :38/2009 பொருள் எண்.38

டவர்ஸ் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்தல்

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.100ன்படி சென்னை மாநகரில் உள்ள கட்டடங்களுக்கு அந்தந்த பகுதிக்கான அடிப்படை கட்டண விகிதம் (Basic rate) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கட்டடத்தின் பரப்பளவு மற்றும் பயன்பாடு அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் உள்ள கட்டடங்களில் வாடகை அடிப்படையில் செல்போன் இணைப்புகளுக்காக டவர்ஸ்கள் அமைக்கப்படுகிறது. இதனால் கட்டட உரிமையாளருக்கு கூடுதலாக வாடகைத் தொகை கிடைக்கப்பெறுகிறது. சொத்துவரி என்பது பெறப்படுகின்ற வாடகை அடிப்படையில் (Reasonable letting value) நிர்ணயம் செய்யப்படுவதால், டவர்ஸ்கள் அமைக்கப்படுவதால் கட்டட உரிமையாளர்களுக்கு கூடுதலாக கிடைக்கப்பெறும் வாடகையினையும் கணக்கில் கொண்டு கட்டடங்களுக்கான சொத்து வரி மாற்றி நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

டவர்ஸ் அமைக்கப்படும் நிகழ்வில் சாதாரண இனங்களில் பின்பற்றப்படும் முறையினை பின்பற்றி வாடகைத் தொகையினை நிர்ணயம் செய்ய இயலாது என்பதால், இந்நிகழ்வில் டவர்ஸ் அமைக்கப்படுவதால் கட்டட உரிமையாளர்களுக்கு கிடைக்கப்பெறும் மாத வாடகைத் தொகையினை கணக்கில் கொண்டு சொத்து வரியினை நிர்ணயம் செய்ய கீழ் குறிப்பிட்டவாறு தனி முறையினைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

**மாத வாடகைத் தொகை x 10.92 x 12.40 %**

வழக்கமான முறையினை பின்பற்றாமல், டவர்ஸ் அமைக்கப்படும் நிகழ்வுகளுக்கென தனியே கணக்கீட்டு முறையினை பின்பற்ற வேண்டியுள்ளதால், இதற்கு மன்றத்தின் ஒப்புதல் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

13.01.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.07/2009 , நாள்: 13.01.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1206/2008
ஆணையர் அவர்களின் 13.01.2009 நாளிட்டக் குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :39/2009 பொருள் எண்.39

சாலை பெயர் மாற்றம்

மன்றம் தீர்மான எண்.475/2008 நாள் 27.08.2008ல் திரு. டாக்டர் பால் தினகரன், இயேசு அழைக்கிறார் நிறுவனம், ஆர்.ஏ.புரம் சென்னை–28 அவர்களின் கோரிக்கையினை பரிசீலித்து மண்டலம்–10, வார்டு குழு தீர்மானத்தினை பெற்று பிராடிஸ் கேசில் சாலைக்கு டி.ஜி.எஸ். தினகரன் சாலை என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசின் உத்திரவினை கோர ஏற்கனவே, மன்றம் அனுமதி அளித்துள்ளது.

அதன்படி இது தொடர்பாக அரசின் ஆணை வேண்டி அரசுக்கு மன்றத் தீர்மான நகலுடன் 09.09.2008 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், தற்பொழுது முதன்மை செயலாளர் (ந.நி.ம.கு.வ.துறை) அவர்களது கடிதத்தில், டாக்டர் பால் தினகரன் அவர்கள் அளித்துள்ள கோரிக்கையினை முறையாக மன்றத்திற்கு சமர்ப்பித்து, மன்றத்தின் குறிப்புகளை மேல் நடவடிக்கைக்காக அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

15.10.2008 நாளிட்ட முதன்மை செயலாளர், ந.நி.ம.கு.வ. துறை அவர்களுக்கு டாக்டர் பால் தினகரன் அவர்கள் சமர்ப்பித்துள்ள மனுவில் பிராடிஸ் கேசில் சாலைக்கு டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்களின் பெயரை வைப்பதற்கு சென்னை மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிய வருவதாகவும், இதற்கு பதிலாக கிரீன்வேஸ் சாலைக்கு டி.ஜி.எஸ். தினகரன் சாலை என பெயர் சூட்ட பரிசீலிக்குமாறு கோரி உள்ளார். ஏற்கெனவே கிரீன்வேஸ் சாலை ஒரு பகுதி ''குமாரசாமி ராஜா'' என மாற்றப்பட்டுள்ளது. எனவே, மற்றொரு பகுதியான கிரீன்வேஸ் சாலை சந்திப்பில் இருந்து தெற்கு கடற்கரை சாலை திருப்பம் வரை சுமார் 1.6 கி.மீ வரை உள்ள சாலைக்கு டி.ஜி.எஸ். தினகரன் சாலை என பெயர் சூட்டுவதற்கும், இது குறித்து அரசிற்கு உரிய முன்மொழிவுகள் அனுப்புவதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வவிமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு வார்டு குழு பரிந்துரை பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 19.01.2009 அன்று தீர்மான எண்.25/2009 ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:நிமஉது.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொது.ந.க.எண். பி3/ 656/09
ஆணையரின் 19.01.2009 நாளிட்ட குறிப்பு

27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :40/2009 பொருள் எண்:40

அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி

அரசாணை(நிலை) எண் 11, நிதி(ஊதியக்குழு) துறை, நாள். 13.01.2009—ல் ஓய்வூதியர்கள்/ குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் அலுவல் ஆய்வுக்குழுவின் பரிந்துரையின்படி திருத்தியமைக்கப்படும்வரை அன்னார் 01.01.2009 அன்று பெற்று வந்த ஓய்வூதியம், ஓய்வூதிய அகவிலைப்படி மற்றும் அகவிலைப்படியினை சேர்த்து மூன்று மாதத்திற்குரிய தொகைகளை இடைக்கால நிலுவைத்தொகையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட ஆணையில் உள்ளாட்சி அமைப்புகளை பொறுத்தவரை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மூலம் நிர்வகிக்கப்படும் நிதி மூலம் மேற்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இடைக்கால நிலுவைத்தொகைகளை ஜனவரி 2009 இறுதிக்குள் ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடைக்கால நிலுவைத் தொகையானது அலுவல் ஆய்வுக்குழுவால் பின்னர் பரிந்துரைக்கப்படும் ஆணையின்படி வழங்கப்படும் நிலுவைத்தொகையில் கழித்துக்கொள்ளப்படும்.

இவ்வரசாணையினை சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியர்களுக்கு அமலாக்கம் செய்ய தோராயமாக ரூ. 19.78 கோடி (ரூபாய் பத்தொன்பது கோடியே எழுபத்தி எட்டு இலட்சம் மட்டும்) செலவிடப்பட வேண்டும்.

மேற்படி அரசாணையினை சென்னை மாநகராட்சியில் அமலாக்கம் செய்ததற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.01.2009 அன்று தீர்மான எண்.23/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று அரசாணை அமல்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

ம.க.கு.ந.க.எண்.அ8/307/2009
ஆணையாளரின் 20.01.2009 நாளிட்ட குறிப்பு.

## 27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :41/2009 பொருள் எண். 41

### அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி

13.01.2009 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்10ல் அரசாணை எண்.358, நிதித் (ச.கு) துறை, நாள் 20.08.2008ல் அரசு ஊழியர்களுக்கு திருத்தப்பட்ட ஊதியத்தை மத்திய அரசின் ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயம் செய்ய அலுவல் குழு ஒன்றை அமைத்து, மூன்று மாதத்திற்குள் குழுவின் பரிந்துரைகளை சமர்ப்பிக்கவும் கோரப்பட்டது. மேலும், அரசாணை 496, நிதி (ச.கு) துறை / துறை நாள் 17.11.2008ல் இக்குழுவின் பதவி காலத்தினை 19.11.2008ற்கு பிறகு மூன்று மாதத்திற்கு நீட்டிப்பு செய்து ஆணையிட்டது.

மேலும், குழுவின் பரிந்துரையினை சமர்ப்பிக்க கால நீட்டிப்பு மேலும் தேவைப்படுவதால், அலுவல் குழு இடைக்கால நிவாரணம் அளிக்க பரிந்துரை செய்தது.

அரசு அலுவல் குழு அளித்த பரிந்துரையினை கனிவுடன் பரிசீலித்து, அரசு அப்பரிந்துரையினை ஒப்புக்கொண்டது. அதன்படி அரசு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி மன்ற பணியாளர்கள் ஆகியோர்களுக்கு கீழ்கண்டபடி இடைக்கால நிவாரணம் வழங்க பரிந்துரை செய்துள்ளது.

1 01.01.2009 அன்று இரண்டு வருட பணிமுடிந்த சம்பள ஏற்ற முறையின் கீழ் / நிலையான சம்பளம்/ தொகுப்பு ஊதியம் / மதிப்பூதியம் ஆகிய பெறும் ஊழியர்களுக்கு 01.01.2009 ல் பெறும் ஊதியத்தை அடிப்படையாக கொண்டு மூன்று மாத அடிப்படை ஊதியம் + அகவிலை ஊதியம் + அகவிலைப்படி + தனிஊதியம் (ஏதேனும் இருந்தால்) இடைக்கால நிவாரணமாக வழங்கப்படவேண்டும்.

2 01.01.2009 அன்று இரண்டு வருடத்திற்கு குறைவாக பணி முடித்த பணியாளர்களுக்கு 01.01.2009னை அடிப்படையாகக் கொண்டு ஒரு மாத அடிப்படை ஊதியம் + அகவிலை ஊதியம் + அடிப்படைப்படி + தனி ஊதியம் (ஏதேனும் இருந்தால்) இடைகால நிவாரணமாக வழங்கப்பட வேண்டும்.

3 01.01.2009 அன்று இரண்டு வருடம் பணிமுடித்த நிலையான ஊதியம் / தொகுப்பு ஊதியம்/ மதிப்பூதியம் பெறும் ஊழியர்கள் 01.01.2009 அன்று பெறும் ஊதியத்தை அடிப்படையாக கொண்டு மூன்று மாத ஊதியம் இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட வேண்டும்.

4 01.01.2009 அன்று இரண்டு வருடம் குறைவாக பணி முடித்த நிலையான ஊதியம் / தொகுப்பூதியம் / மதிப்பூதியம் பெறும் ஊழியர்கள் 01.01.2009 பெறும் ஊதியத்தில் ஒரு மாதத்தின் ஊதியத்தை இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட வேண்டும்.

தற்போது வழங்கப்படும் இடைக்கால நிவாரணம் பின்னர் அலுவல் குழு பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை மூலம் திருத்தப்பட்ட ஊதியத்தின் மூலம் வழங்கப்படும் நிலுவைத் தொகையில் கழித்து கொள்ளப்படும்.

மேலும், இந்த இடைக்கால நிவாரண தொகையினை, ஜனவரி 2009 மாதத்திய ஊதியம் வழங்குவதற்கு முன் பெற்று வழங்கிட அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, ஜனவரி 2009 மாதத்திய ஊதிய பட்டியினை கோரமல் இந்த இடைக்கால நிவாரண தொகை பட்டியினை முதலில் அனுமதித்திட அனைத்து ஊதியம் வழங்கும் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்படுகிறது

ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் உடனடியாக பெற்று வழங்கிட சம்பளம் பெற்று வழங்கும் அதிகாரிகளே பொறுப்பாவர் என்றும் இந்த இடைக்கால நிவாரண தொகையினை பதிவு செய்ய தனியாக பதிவேடும், ஊழியர்களின் பணிப்பதிவேட்டில் இத்தொகையினை வழங்கப்பட்டமை குறித்து பதியப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

<u>ம.க.கு.ந.க.எண்.அ8/307/2009</u>

இந்த அரசாணை சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கும் பொருந்தும் இந்த இடைக்கால நிவாரணம் வழங்குவதால் இந்நிதியாண்டில் கூடுதல் செலவினமாக ரூ.45 கோடி செலவாகும்.

எனவே, 13.01.2009 நாளிட்ட அரசாணை எண்.10, நிதித் (ச.கு) துறையினை சென்னை மாநகராட்சியில் அமலாக்கம் செய்தற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 20.01.2009 அன்று தீர்மான எண்.24/2009ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று அரசாணை அமல்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.அ1/9768/08.**
**ஆணையர் அவர்களின் 20.01.09 நாளிட்ட குறிப்பு.**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :42/2009 பொருள் எண். 42

**பெற்றோர்களை பிரிந்து வாழும் குழந்தைகள் மற்றும் குழந்தை தொழிலாளர்களுக்கு எம்.சி.சி.எஸ்.எஸ் தொண்டு நிறுவனம் மூலம் பாதுகாப்பான, சுகாதாரமான, வசதியான தங்கும் இல்லம் வழங்குவது மற்றும் அவர்களின் வாழ்க்கையில் படிப்படியான புனர்வாழ்வை கொணர்வது. (Providing Night Shelter for Street Children)**

சென்னை மாநகராட்சி, கல்வித்துறை சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் 2008–09 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை அறிவித்த திட்டம் வரிசை எண்.14 ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் மாநகராட்சி திட்டத்தின் அடிப்படையில் சாலையோரங்களில் தங்கி வாழும் குழந்தைகள் நலனிலும் மாநகராட்சி அதிக அக்கறை செலுத்தும் வண்ணம், இரவில் பாதுகாப்பாக தங்கி துயில் கொள்வதற்காக இரவு நேர காப்பகம் (Night Shelter) உருவாக்கி பராமரிப்பதற்கான திட்டத்தினை செயல்படுத்த பல்வேறு நேர காப்பகம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை விதிமுறைகளின் அடிப்படையில் விலைப்புள்ளி கோரப்பட்டது.

23.10.08 அன்று 3 விலைப்புள்ளி கீழ்கண்ட இரவு காப்பகம் அமைப்பு குழுக்களிடமிருந்து பெறப்பட்டது.

1. சென்னை எம்.சி.சி.எஸ்.எஸ்.(Madras Christian Council of Social Service)
2. டான் பாஸ்கோ அன்பு இல்லம் சமூக தொண்டு அமைப்பு (Don Bosco Anbu illam Social Service Society)
3. சுயதொழில் தொண்டு அமைப்பு (Rehabilitation and improvement through self employment)

## Madras Christian Council

எம்.சி.சி.எஸ்.எஸ் தொண்டு நிறுவனம் பல்வேறு கிறிஸ்துவ திருச்சபைகள் மற்றும் ஒரு சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து 1965 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பின்னர் சங்கங்களின் பதிவு சட்டம் 1860ன் படி 1973 ல் பதிவு செய்யப்பட்டு ஒத்த சிந்தனை கொண்ட மற்ற தொண்டு நிறுவனங்களோடும், அரசுத் துறைகளோடும் இணைந்து மனித உரிமை பணிகளுக்காக, குறிப்பாக நலிவடைந்த மக்களின் வாழ்வுரிமைக்காக செயல்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டவர்களை மீட்டு அவர்கள் மாற்று வாழ்க்கை வழிமுறைகளை தேர்ந்தெடுக்க ஆலோசனைகளையும், மீண்டும் அவர்களை அவரவர் குடும்பங்களில் இணைந்து வாழும் வகையில் வழிகாட்டி வருகிறது என்று கூறப்பட்டுள்ளது. இந்நிறுவனம் புள்ளி விவரங்களையும் களஆய்வு விவரங்களையும் வழிமுறைகளையும் செயல்பாடுகளையும் தனிப்பட்ட தேவைகளையும் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இத்திட்ட குறிக்கோளும், நோக்கங்களும்**

**குறிக்கோள்கள்:–**

குழந்தை தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான, வசதியான தங்கும் இல்லம் வழங்குவது மற்றும் அவர்களின் வாழ்க்கையில் படிப்படியான புனர்வாழ்வை கொணர்வது.

**நோக்கங்கள்:–**

(1) பாதுகாப்பான மற்றும் உதவிகரமாக இருக்கும் வகையில் ஏதுவான உறைவிடம் வழங்குதல் (2) வாழ்க்கை திறன் கல்வி அளித்தல் (3) ஆளுமைத் திறன் மேம்பாட்டை வளர்த்தல் (4) சமூக வளம் சார்ந்த ஆதரவு பணிகளையும் நலவாழ்வு கல்வி மற்றும் தொடர் மருத்துவ பரிசோதனைகளை நடத்துதல் (5) தொடர்ச்சியான தொடர்பணிகள் மூலம் வாழ்க்கையில் முக்கிய தருணங்களில் பங்கெடுக்க வழிகாட்டல்.

**வழிமுறைகள்:–**

- சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் 50 வீதியோர சிரார்கள் அடையாளம் கண்டு இரவு உறைவிடத்தில் சேர ஊக்கப்படுத்தப்படுவார்கள். இத்திட்ட வழி நடத்துனர்கள் உள் சேர்க்கை படிவத்தில் அவர்களின் புகைப்படங்கள் மற்றும் விவரங்களை எதிர்கால தேவைக்காகவும் பதிவு செய்யப்படும்.
- காலையில் குளித்து சுத்தமாக இருப்பதுடன், இரவு வேளையில் குளித்தலின் அவசியம் உறுதி செய்யப்படும்.
- காப்பாளர்கள் நிறுவனத்தால் மேற்பார்வையிடப்படுவார்கள். இரவு 8 மணிக்கு மேல் 9 மணிக்குள் ஒவ்வொரு நாளும் உணவு வழங்கப்படும். மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பயனாளிகளின் துணையோடு உணவிற்கான குறைந்தபட்ச கட்டணமாக ரூ.10 நிர்ணயிக்கப்பட்டு நிறுவனமே ஏற்றுக்கொள்ளும். மாநகராட்சியால் உணவு வழங்கப்பட்டால் ரூ.12 நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டும்.
- ஒவ்வொருவருக்கும் மெத்தையுடன் கூடிய கட்டில் படுக்கை விரிப்பு மற்றும் தலையணைகள் வழங்கப்படும்.
- சமூக விழிப்புணர்வு, சமூகப் பொறுப்புகள், பொருளாதார விழிப்புணர்வு மற்றும் வங்கிகளில் சேமித்தல் ஆகியவை குறித்து காப்பாளர்கள் வகுப்பு எடுப்பர்.
- எழுத்தறிவு சார்ந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்,பொழுது போக்குகள் அரைமணி நேரம் ஒதுக்குதல் மீண்டும் பள்ளிக்கல்வி தொடரவும்,
- இந்த இரவு விடுதி ஓய்வு எடுப்பதற்கும், மகிழ்ச்சியாக இருப்பதற்கும், மருத்துவம் மற்றும் மனமாற்றும் சமூக நலத்தோடு இருப்பதற்கும், பின் குழந்தைகளுக்கு நண்பர்களாகவும், பாதுகாப்பு, சுத்தமான இருப்பிடமாக அமையும்.

**விளைவுகள்:–**

சமூக பொருளாதார அரசியல் விழிப்புணர்வை கற்றுக் கொள்வதால், பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக முடியும்.

**அளிக்கப்படும் தேவைகள்:–**

1. படுக்கை / இரவு தங்கும் விடுதி
2. குளியல் / கழிவறை / கழிவறை வசதி
3. முறை சாரா கல்வி / ஒழுக்கம் மற்றும் ஆன்மீக வகுப்பு
4. தேவையின் அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு
5. குடும்பத்துடன் சேர்ப்பது.
6. மன மகிழ்ச்சிக்கான செயல்பாடுகள்
7. மருத்துவ உதவி / உளவியல் ஆதரவு
8. அவர்கள் பொருட்களை பத்திரப்படுத்த வசதி
9. தேவையின் அடிப்படையில் காவல் மற்றும் சட்ட உதவி

**செயல்பாடுகள்:–**

- பாதுகாப்பான தங்கும் விடுதி
- மருத்துவ பராமரிப்பு
- உளவியல் பராமரிப்பு
- சட்ட உதவி
- குழந்தை தொழிலாளர்களிடம் ஒரு சேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒரு பகுதியை சேமிக்க வைப்பது.

சென்னை எம்.சி.சி.எஸ்.எஸ்.(Madras Christian Council of Social Service) அமைப்பு தொடர் செலவினமாக ரூ. 4,34,000/– மற்றும் தொடரா செலவினமாக ரூ.1,55,700/–சேர்த்து மொத்தமாக ரூ. 5,89,700/– என்று இரண்டு வருடங்களுக்கு விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளது.

**க.து.ந.க.எண்.அ1/9768/08**

**அ. அன்றாட செலவினங்கள்**

| வ.எண். | செலவினங்களின் வகைகள் | தொகை ரூ. |
|---|---|---|
| 01. | சம்பளம்<br>காப்பாளர்கள் – 2 x ரூ.5000 x 24 மாதங்கள் | 2,40,000/– |
| 02. | காவலாளர் – 1 x ரூ.4000 x 24 மாதங்கள் | 96,000/– |
| 03. | பயணப்படி ( கண்காணிப்பளருக்கான)<br>ரூ. 800 x 2 x 24 மாதங்கள் | 38,400/– |
| 04. | தொலைபேசி / அஞ்சல் கட்டணங்கள் மாதத்திற்கு – ரூ.1000 x 24 மாதங்கள் | 24,000/– |
| 05 | எழுது பொருட்கள் ரூ. 500 x 24 மாதங்கள் | 12,000/– |
| 06 | நிர்வாக மற்றும் ஆவணப் பணிகளுக்கு மாதத்திற்கு – ரூ. 1000 x 24 மாதங்கள் | 24,000/– |
| | **மொத்தம்** | **4,34,000/–** |

**ஆ. நிலையான செலவினங்கள்**

| வ.எண். | செலவினங்களின் வகைகள் | தொகை ரூ. |
|---|---|---|
| 01 | படுக்கை – ரூ. 350 x 50 | 17,500 |
| 02 | அலமாரி – 2 | 10,000 |
| 03 | மேசை–2 | 6,000 |
| 04 | பிளாஸ்டிக் நாற்காலி – ரூ. 350 x 12 | 4,200 |
| 05 | பக்கெட் மற்றும் மக்கு – ரூ. 150 x 50 | 7,500 |
| 06 | இரும்புப் பெட்டி ( பூட்டுடன்) – ரூ. 400 x 50 | 20,000 |
| 07 | தட்டு மற்றும் டம்பளர் – ரூ. 70 x 50 | 3,500 |
| 08 | துண்டு – ரூ. 50 x 200 | 10,000 |
| 09 | மழைக்கோட் / கையுரை / காலணிகள் – ரூ. 300 x 50 | 15,000 |
| 10 | தொலைக்காட்சி பெட்டி / வானொலி வாங்க | 20,000 |
| 11 | கேரம், சதுரங்கம் போன்ற பொருட்கள் | 10,000 |
| 12 | இதர செலவுகள் – ரூ. 10,000 x 2 வருடத்திற்கு | 20,000 |
| 13 | விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ( பயிற்சியாளர் கட்டணம்– பயிற்சி பொருட்கள் ரூ.6000 x 2 வருடத்திற்கு | 12,000 |
| **மொத்தம்** | | **1,55,700** |

**நிதி சுருக்கம் :–**

**அன்றாட செலவினங்கள் – ரூ. 4,34,000/–**
**நிலையான செலவினங்கள் – ரூ. 1,55,700/–**
**------------------**
**மொத்த தொகை – ரூ. 5,89,700/–**
**------------------**

**(ரூபாய் ஐந்து லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து எழுநூறு மட்டும்)**

மேற்கண்ட மூன்று சமூக அமைப்பு குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்புள்ளியில் Madras Christian Council of Social Service அளிக்கப்பட்ட விலைப்புள்ளியில் ரூபாய். 5,89,700/– ( தொடர் செலவினம் ரூ.4,34,000/– மற்றும் தொடரா செலவினம் ரூ. 1,55,700/– உட்பட) மிகவும் குறைவானது.

**க.து.ந.க.எண்.அ1/9768/08**

குப்பை சேகரிப்பவர்களோடு நாங்கள் கலந்துரையாடிய போது கண்டவற்றின்படி, அவர்கள் நடைபாதை கடைகளில் சுகாதாரமில்லாமல் தயார் செய்து விற்பனை செய்யக்கூடிய சுத்தமில்லாத உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய உணவுப் பொருட்களையே வாங்கி உண்ணுகின்றனர். எனவே மேற்கண்டவைகளின் அடிப்படையில் எங்கள் உணவகத்தில் சுகாதாரமான முறையில் தயார் செய்யப்படுகின்ற சத்துமிகுந்த ஒருவேளை உணவை நபர் ஒன்றுக்கு ரூ.10 என்ற மானிய விலையில் அளிப்பதை இத்திட்ட அறிக்கையில் இணைந்துள்ளோம். இது குப்பை சேகரிப்பவர்களின் ஆரோக்கிய வாழ்விற்கு அடிப்படையாக அமையும் மேலும் இந்த ஒரு வேளை உணவை அவர்களுக்கு மாநகராட்சியே வழங்க முன் வந்தால் எம்.சி.சி.எஸ்.எஸ். குறிப்பிடுகின்ற உணவிற்காக நபர் ஒன்றுக்கு ரூ.12 மட்டும் அளித்தால் போதுமானது.

மேலும், தொடரா செலவினத் தொகை ரூ.1,55,700/– சென்னை மாநகராட்சி நிதியில் தளவாடா பொருட்கள் வாங்கி (நிறுவனம் குறிப்பிட்டுள்ளவாறு) செலவு செய்து அசையா சொத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் மன்றத்தின் ஒப்புதல் பெற்று இத்திட்டத்தை செயல்படுத்த கீழ்கண்ட இனங்களுக்கு

01. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் வரவு–செலவு 2008–09 கீழ் வரிசை எண். 14ல் தெரிவிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தினை செயல்படுத்தவும் (Create Night shelter for street children),
02. இத்திட்டத்தினை செயல்படுத்த Madras Christian Council of Social Service அவர்களின் அத்தொண்டு அமைப்பு தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்தும் சென்னை மாநகராட்சிக்கு ஏற்புடையதாக கருதப்படுவதாலும், குறைந்த விலைப்புள்ளிக்கான ரூ.4,34,000/– தெரிவித்துள்ளதாலும் செயல்படுத்த பணி ஆணை வழங்குவதற்கும்,
03. இத்திட்டதிற்காக ஏற்படும் மொத்த தொகை ரூ.4,34,000/– ஐ முன் பணமாக கணக்கு தலைப்பு 803–ல் பெற்று பின்னர் 166 தொடக்க / நடுநிலைப்பள்ளி கல்வி செலவினம் 2008–2009, 2009–10 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படும் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும்,
04. சென்னை மாநகராட்சி நிதியில் ரூ.1,55,700/–செலவில் தளவாடா பொருட்கள் வாங்கி (நிறுவன குறிப்பிட்டுள்ளவாறு பொருட்கள் வாங்குவதற்கு) அசையா சொத்தின் கீழ் சென்னை மாநகராட்சிக்கு கொண்டு வருவதற்கும், இச்செலவினை கணக்கு 166 கல்வி / செலவினங்கள் தொடக்க / நடுநிலைப்பள்ளியில் 2008–09 ஆண்டில் செலவை மேற்கொள்வதற்கும். தேவைப்பட்டால் இதற்கும் கணக்கு தலைப்பில் 803ல் முன் பணம் பெற்று செலவு செய்து பின்னர் ஈடு செய்வதற்கும்,

நிலைக்குழு (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு & நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.01.2009 அன்று தீர்மான எண். 04/2009–ன்படி நிலைக்குழு(கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.01.2009 அன்று தீர்மான எண். 26/2009–ன்படி நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :43/2009 பொருள் எண்.43

**உதவி செயற்பொறியாளர் பதவியில் ஊதிய நிர்ணயம் செய்ய அனுமதி**

10.12.2008 நாளிட்ட கடிதத்தில், திரு.ஜி.தமிழ்செல்வன் மற்றும் 21 உதவி செயற்பொறியாளர்கள், தாங்கள் 2006–07 ஆம் ஆண்டு மே மற்றும் ஜீன் மாதங்களில் உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றோம், என்றும் 2005 – 06ஆம் ஆண்டு உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு விட்டது எனவும், எனவே அதே அடிப்படையில் தங்களுக்கும் உதவி செயற்பொறியாளர் பதவியில் ஊதிய நிர்ணயம் செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது சம்மந்தமாக தெரிவிப்பது யாதெனில், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை மற்றும் மன்றதீர்மான எண்.132/07 நாள்.25.04.2007ன்படி, கீழ்கண்ட உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும், உதவி பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றம் வழங்கவிருக்கும் தீர்ப்புக்குட்பட்டும், தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

1. ஜி. தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர்
2. கே.கோவிந்தராஜ், உதவி செயற்பொறியாளர்
3. என்.மாதவன், உதவி செயற்பொறியாளர்
4. சு. சுதாகர், உதவி செயற்பொறியாளர்
5. பி. சிவகுமார், உதவி செயற்பொறியாளர்
6. ஜி. கிருஷ்ணமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்
7. ஏ.எஸ். முருகன், உதவி செயற்பொறியாளர்
8. ஆர். சரவணன், உதவி செயற்பொறியாளர்
9. பி.ஆர். சரவணமூர்த்தி , உதவி செயற்பொறியாளர்
10. எஸ். ஜெயபிரகாஷ் , உதவி செயற்பொறியாளர்
11. ஆர். செந்தில்நாதன், உதவி செயற்பொறியாளர்
12. கே. வெற்றிஎழிலன், உதவி செயற்பொறியாளர்
13. எ. நாச்சன், உதவி செயற்பொறியாளர்
14. ஜி. லோகநாதன், உதவி செயற்பொறியாளர்
15. என். திருமுருகன், உதவி செயற்பொறியாளர்
16. ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர்
17. எஸ். ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்
18. ஆர்.மாறன்இளங்கோ, உதவி செயற்பொறியாளர்
19. கே. உமாபதி, உதவி செயற்பொறியாளர்
20. எம். திலகம், உதவி செயற்பொறியாளர்
21. ஆர். வேல்முருகன், உதவி செயற்பொறியாளர்
22. டி. முனுசாமி, உதவி செயற்பொறியாளர்

இது தொடர்பாக மேலும் சமர்ப்பிப்பது யாதெனில், 2004ம் ஆண்டு வரை உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற 114 உதவி செயற்பொறியாளர்களுக்கு அரசாணை எண்.71, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.31.03.2003ன்படி அரசு பணி உறுதியாக்கம் செய்து ஆணை வழங்கியுள்ளது, மீதமுள்ள உதவி செயற்பொறியாளர்களுக்கு பணிமூப்பு குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், இவ்வழக்குகள் முடிவுபெற்றவுடன் அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கு அரசின் உறுதியாக்கம் பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மேலும் தெரிவிப்பது யாதெனில், 127 உதவி செயற்பொறியாளர்களுக்கு அரசின் உறுதியாக்கம் பெறுவதற்கு முன் தற்போது நடைமுறையில் உள்ள அடிப்படை விதிகள் மற்றும் அரசாணைகளின் படியும் அப்பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டு, சில நிபந்தனைகளுடன் 127 உதவி செயற்பொறியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தனியர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து கீழ்காணும் 22 உதவி செயற்பொறியாளர்களுக்கு அரசின் உறுதியாக்கம் பெறுவதற்கு முன், தற்போது நடைமுறையிலுள்ள அடிப்படை விதிகள் மற்றும் அரசாணைகளின் படியும் சில நிபந்தனைகளுடன் ஊதியம் நிர்ணயம் செய்யலாம்.

1. ஜி. தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர்
2. கே.கோவிந்தராஜ், உதவி செயற்பொறியாளர்
3. என்.மாதவன், உதவி செயற்பொறியாளர்
4. சு. சுதாகர், உதவி செயற்பொறியாளர்
5. பி. சிவகுமார், உதவி செயற்பொறியாளர்
6. ஜி. கிருஷ்ணமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்
7. ஏ.எஸ். முருகன், உதவி செயற்பொறியாளர்
8. ஆர். சரவணன், உதவி செயற்பொறியாளர்
9. பி.ஆர். சரவணமூர்த்தி , உதவி செயற்பொறியாளர்
10. எஸ். ஜெயபிரகாஷ் , உதவி செயற்பொறியாளர்
11. ஆர். செந்தில்நாதன், உதவி செயற்பொறியாளர்
12. கே. வெற்றிஎழிலன், உதவி செயற்பொறியாளர்
13. எ. நாச்சன், உதவி செயற்பொறியாளர்
14. ஜி. லோகநாதன், உதவி செயற்பொறியாளர்
15. என். திருமுருகன், உதவி செயற்பொறியாளர்
16. ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர்
17. எஸ். ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்
18. ஆர்.மாறன்இளங்கோ, உதவி செயற்பொறியாளர்
19. கே. உமாபதி, உதவி செயற்பொறியாளர்
20. எம். திலகம், உதவி செயற்பொறியாளர்
21. ஆர். வேல்முருகன், உதவி செயற்பொறியாளர்
22. டி. முனுசாமி, உதவி செயற்பொறியாளர்

ஏற்பின், கீழ்கண்ட இனங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கீழ்கண்ட 22 உதவி செயற்பொறியாளர்களும் அப்பதவி உயர்வுக்கான முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், பணி மூப்பு குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அரசின் உறுதியாக்கம் பெறுவதற்கு முன்பாக, அடிப்படை விதி 22 (B) அல்லது அதற்கு இணையான விதிகளின் படி அடிப்படையில், அரசு கடித எண்.50220 FR –1/80 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.1.7.1981ல் அரசு அளித்துள்ள கருத்துருவின் படி துறைத்தலைவரின் சான்றிதழ் பெற்று அவர்கள் அப்பதவியில் பொறுப்பேற்ற நாள் முதல் ஊதிய நிர்ணயம் செய்யவும்:

01. ஜி. தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர்
02. கே.கோவிந்தராஜ், உதவி செயற்பொறியாளர்
03. என்.மாதவன், உதவி செயற்பொறியாளர்
04. சு. சுதாகர், உதவி செயற்பொறியாளர்
05. பி. சிவகுமார், உதவி செயற்பொறியாளர்
06. ஜி. கிருஷ்ணமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்
07. ஏ.எஸ். முருகன், உதவி செயற்பொறியாளர்
08. ஆர். சரவணன், உதவி செயற்பொறியாளர்
09. பி.ஆர். சரவணமூர்த்தி , உதவி செயற்பொறியாளர்
10. எஸ். ஜெயபிரகாஷ் , உதவி செயற்பொறியாளர்
11. ஆர். செந்தில்நாதன், உதவி செயற்பொறியாளர்
12. கே. வெற்றிஎழிலன், உதவி செயற்பொறியாளர்
13. எ. நாச்சன், உதவி செயற்பொறியாளர்
14. ஜி. லோகநாதன், உதவி செயற்பொறியாளர்
15. என். திருமுருகன், உதவி செயற்பொறியாளர்
16. ஆர்.சுரேஷ்குமார், உதவி செயற்பொறியாளர்
17. எஸ். ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்
18. ஆர்.மாறன்இளங்கோ, உதவி செயற்பொறியாளர்
19. கே. உமாபதி, உதவி செயற்பொறியாளர்
20. எம். திலகம், உதவி செயற்பொறியாளர்
21. ஆர். வேல்முருகன், உதவி செயற்பொறியாளர்
22. டி. முனுசாமி, உதவி செயற்பொறியாளர்

2. அவ்வாறு ஊதிய நிர்ணயம் செய்து பணப்பயன்கள் வழங்குவது குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரே அல்லது அரசோ ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில் அவ்வூதிய நிர்ணயத்தால் பெறப்பட்ட தொகையை பிடித்தம் செய்து கொள்ள ஆட்சேபனை இல்லை என்ற உறுதிமொழி கடிதம் தனியர்களிடமிருந்து பெற்று ஊதிய நிர்ணயம் செய்யவும்:

3. மேற்கண்ட ஊதிய நிர்ணயம், பதவி உயர்வு தொடர்பாக அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டதாகும்.

அரசின் உறுதியாக்கம் பெறுவதற்கு முன்பு மேற்படி ஊதிய நிர்ணயத்தில் அடிப்படையில் 22 உதவி செயற்பொறியாளர்களில், தன் விருப்ப ஓய்வில் செல்பவர்களுக்கும், வயது முதிர்வு ஓய்வில் செல்பவர்களுக்கும், மேற்கண்ட ஊதிய நிர்ணயத்தின் அடிப்படையில் ஓய்வு ஊதியம் நிர்ணயம் செய்ய இயலாது. ஆனால் பதவி உயர்வுக்கு முன்பு வகித்து வந்த பதவியிலேயே ஓய்வூதியம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/34261/2008.**

**ஆணையர் அவர்களின் 12.01.2009 நாளிட்ட குறிப்பு**

**27.01.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :44/2009 பொருள் எண்.44

**உதவி செயற்பொறியாளர் தெரிவுப் பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜுன் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி/இளநிலை பொறியாளர் பதவியாகும்.

உதவி செயற்பொறியாளர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| Assistant Executive Engineer (otherthan Assistant Divisional Engineer (Electrical)<br><br>ரூ.8000–275–13500 | By promotion from the categories of Junior Engineers and Assistant Engineers, Head Draftsman and Surveyors in the Corporation Engineering Subordinate Services;<br><br>(G.O. Ms. No.296, M.A. & W.S., dated 12.03.1990) in the ratio of 3 : 1 between the Degree holders and the Diploma holders ; of<br><br>(G.O. Ms. No.138, M.A. & W.S., dated 09.02.1990) | (i) (a) B.E. Degree (Civil or Mechanical) of any University or Institution recognized by the University grants Commission for purposes of its grant or any other qualification considered equivalent thereto;<br><br>(b) Must have served as Assistant Engineer in the Corporation Engineering Subordinate Service, Municipal Engineer, Grade II, Junior Engineer or Supervisor (Public Health) for a period of not less than five years on duty:<br><br>Provided that a person who acquires an engineering degree or its equivalent during his service as Junior Engineer in the Corporation Engineering Subordinate Service will be eligible for appointment as Assistant Executive Engineer if he has put in three years of service in the Corporation Engineering Subordinate Service after getting the Engineering degree or its equivalent. The person so acquiring the Engineering degree or its equivalent will be placed immediately below the person holding the post of Assistant Engineer on the date of acquiring the above qualification; or<br><br>(G.O. Ms. No. 138, MA and WS, dt. 9-2-1990.)<br><br>(c) Municipal Engineer Grade II or Assistant Engineer (Public Health) or<br><br>(d) Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education and Training or any other qualifications considered equivalent thereto:<br><br>Provided that Draftsman, Overseers and Surveyors of the Corporation Engineering Subordinate Service promoted as Junior Engineer in the same service; Head Surveyors and Head Draftsman of the Corporation Engineering Subordinate Service, Municipal Engineer Grade-III or Supervisor (Public Health) Possessing the qualifications referred to in item (d) above shall be eligible for appointment as Asst. Exe. Engrs, only if they have put in a total service of not less than 10 years in one or more categories or as Municipal Engineer Grade III or as Supervisor (Public Health) and<br><br>(G.O. Ms. No. 907 RD and LA dt. 20-5-1981.)<br><br>(ii) A pass in the Account Test for Public Works Department Officers and Subordinates. |

கடந்த ஆண்டு 2007–2008 ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கான காலிபணியிடங்கள் இல்லாத காரணத்தால் 01.06.2007 ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியல் இன்மை பட்டியலாக வெளியிடப்பட்டது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/34261/2008**

நடப்பு பட்டியல் ஆண்டான 01.06.2008 முதல் 31.05.2009 வரையில் உதவி செயற் பொறியாளர் பதவியில், பதவி உயர்வு மற்றும் ஓய்வு காரணமாக மொத்தம் உத்தேசமாக கீழ்கண்டவாறு 14 காலிப்பணிடங்கள் எழ வாய்ப்பு உள்ளது.

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| உதவி செயற் பொறியாளர் பதவியில் காலிப்பணியிடங்கள் | 4 |
| வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறுபவர்கள் | 2 |
| செயற் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றதால் | 8 |
| மொத்தம் | 14 |

3:1 என்ற விகிதாச்சார முறையின்படி, கடந்த மூப்புப்பட்டியலில் பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளருடன் தெரிவுப் பட்டியல் முடிவடைந்துள்ளதால், இந்த பட்டியல் ஆண்டில் 01.06.2008 மைய நாளில் தெரிவுப் பட்டியல் மூன்று பட்டம் பெற்ற உதவி பொறியாளர் என்ற நிலையில் தெரிவுப்பட்டியல் துவக்கப்பட்டு, பணிமூப்பு மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பின்வருமாறு அமைகிறது.

| தகுதி வாய்ந்த பட்டம் பெற்ற உதவி பொறியாளர்கள் | தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளர்கள் |
|---|---|
| 1. ஆர். முரளி, வார்டு எண்.141,<br>2. கே. சுந்தரேசன், வார்டு எண்.90<br>3. சி. லாரன்ஸ், வார்டு எண்.154<br>4. எ. குமார், வார்டு எண்.100<br>5. பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23<br>6. காமராஜ், பேருந்து சாலை துறை<br>7. பிரதீப் குமார், மண்டலம்–7<br>8. ஜெ. ஜெயகாந்த், கட்டிடத்துறை<br>9. சகுபார் உசேன், கட்டிடத்துறை<br>10. கே. சுந்தரராஜன், மண்டலம்–3<br>11. சுபாஷ், மண்டலம்–5<br>12. சாந்தி.வி, மண்டலம்–2<br>13. அம்பா சங்கர், மண்டலம்–10<br>14. டி.கே. கணேசன், பாலங்கள் துறை | 1. எஸ். ஜெயக்குமார், வார்டு எண்.152,<br>2. சி. ரகுபதி<br>3. கே. தங்கவேலு, பேருந்து சாலை துறை<br>4. உறரிபாபு, மண்டலம்–7<br>5. டி. தியாகராஜன், பேருந்து சாலை துறை |

மேற்படி பட்டம் பெற்ற உதவி பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.3ல் உள்ள உதவி பொறியாளர் திரு. சி. லாரன்ஸ், வரிசை எண்.4ல் உள்ள உதவி பொறியாளர் திரு.ஏ. குமார், ஆகிய இருவர் மீதும் மற்றும் பட்டயம் பெற்ற இளநிலை பொறியாளர் பட்டியலில் வரிசை எண்.2ல் உள்ள திரு.சி. ரகுபதி, இளநிலை பொறியாளர் மற்றும் வரிசை எண்.3ல் உள்ள திரு.கே. தங்கவேலு, இளநிலை பொறியாளர் ஆகியோர் மீது, கட்டடங்கள் கட்டப்பட்ட நிகழ்வில் தனியர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கையினை மேற்கொள்ள ஆணையிடப்பட்டு விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை நடைப்பெற்று வந்தது. 30.12.2008 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்த விவாதத்தில் ஒரு சில மாமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய ஆட்சேபனை அடிப்படையில் திரு. எ. குமார் திரு. சி. ரகுபதி, மற்றும் திரு.கே. தங்கவேலு ஆகியவர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கையினை ஒரு மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவந்து தனியர்களின் பெயர்களையும் இவ்வாண்டிற்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கவேண்டும் என முடிவெடுக்கப்பட்டு இப்பொருள் தள்ளிவைக்கப்பட்டது.

விசாரணை அலுவலர் திரு.கே. பாலசுந்தரம் தலைமைப் பொறியாளர், (கட்டடம் மற்றும் பாலங்கள்) பொறுப்பு அவர்கள் தனது விசாரணை அறிக்கைகளில் மேற்சொன்ன மூன்று பொறியாளர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் யாவும் "சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை (Held Not proved beyond doubt)" என சமர்ப்பித்துள்ளார். இவ்வொழுங்கு நடவடிக்கை கோப்புகளின் மீது இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் அரசிடமே உள்ள காரணத்தினால் கோப்புகள் அனைத்தையும் அரசுக்கு அனுப்பி இறுதி ஆணை பெறப்படல் வேண்டும். இதனிடையில் விசாரணை அலுவலர் சமர்ப்பித்துள்ள விசாரணை அறிக்கையின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை கோப்புகளின் மீது ஒழுங்கு முறை அதிகாரி (Disciplinary Authority) ஆன ஆணையர் வழங்கிய இறுதி ஆணையின் மீது அரசு வழங்கவிருக்கும் இசைவுக்கு உட்பட்டு மூன்று பொறியாளர்களின் பெயர்களை தெரிவப்பட்டியலில் சேர்க்க ஆணை வேண்டப்படுகிறது.

எனவே, 1.06.2008ஐ மைய நாளாகக் கொண்டு 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் தயாரிக்கப்படும் உதவி செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வரிசை எண். | உதவி/இளநிலை பொறியாளரின் பெயர் திருவாளர்கள் | துறை/மண்டலம் | பட்டம்/பட்டயம் |
|---|---|---|---|
| 01 | ஆர். முரளி, உதவி பொறியாளர் | மண்டலம்=9 | பட்டம் |
| 02 | கே. சுந்தரேசன், உதவி பொறியாளர். | மண்டலம்=6 | பட்டம் |
| 03 | எ.குமார், உதவி பொறியாளர் | மண்டலம்–4 | பட்டம் |
| 04 | எஸ். ஜெயக்குமார், வார்டு எண்.152 | மண்டலம்=10 | பட்டயம் |
| 05 | பி.எஸ். சீனிவாசன், வார்டு எண்.23 | மண்டலம்=2 | பட்டம் |
| 06 | காமராஜ் | பேருந்து சாலை துறை | பட்டம் |
| 07 | பிரதீப் குமார் | மண்டலம்–7 | பட்டம் |
| 08 | சி. ரகுபதி, இளநிலை பொறியாளர் | | பட்டயம் |
| 09 | ஜெ. ஜெயகாந்த் | கட்டிடத்துறை | பட்டம் |
| 10 | சகுபார் உசேன் | கட்டிடத் துறை | பட்டம் |
| 11 | கே. சுந்தரராஜன் | மண்டலம்–3 | பட்டம் |
| 12 | கே. தங்கவேலு, இளநிலை பொறியாளர் | பேருந்து சாலைதுறை | பட்டயம் |
| 13 | சுபாஷ் | மண்டலம்–5 | பட்டம் |
| 14 | சாந்தி | மண்டலம்–2 | பட்டம் |

மேற்படி பட்டியலில் உள்ள உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர் வரிசை எண். 3,8 மற்றும் 12 ஆகிய நபர்களை தவிர்த்து மீதம் உள்ள அனைவரும் உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு அனைத்து கல்வி மற்றும் பணி தகுதிகளும் பெற்றுள்ளபடியால் இவர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கலாம். வரிசை எண்.3,8 மற்றும் 12 ஆகிய மூன்று நபர்களும் தங்கள் மீது இருந்த ஒழுங்கு நடவடிக்கையின் மீது ஒழுங்கு முறை அதிகாரி வழங்கிய ஆணைக்கு அரசு இசைவு தெரிவிக்கும் பட்சத்தில் மட்டுமே இவர்கள் முழு தகுதி பெற்றுள்ளனர் என பொருள் கொள்ளப்படும்.

எனவே கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ) திரு. எ. குமார், உதவி பொறியாளர், திரு. சி. ரகுபதி, இளநிலை பொறியாளர், மற்றும் திரு. கே. தங்கவேலு, இளநிலை பொறியாளர், ஆகியோர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கோப்புகளில் விசாரணை அலுவலர் தனியர்களின் மீதான குற்றச்சாட்டுகள்யாவும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என சமர்ப்பித்துள்ள விசாரணை அறிக்கையின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை கோப்புகளின் மீது ஒழுங்கு முறை அதிகாரி (Disciplinary Authority) ஆன ஆணையர் வழங்கிய இறுதி ஆணையின் மீது அரசு வழங்கவிருக்கும் இசைவுக்கு உட்பட்டு மூன்று பொறியாளர்களின் பெயர்களை தெரிவப்பட்டியலில் சேர்க்கவும்.

ஆ) உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களிலும், தெரிவுப்பட்டியல் காலாவதியாகும் ஓராண்டு காலம் வரை (The Panel shall be valid for a period of one year from the date of approval by the competent authority), வயது முதிர்வு மற்றும் பதவி உயர்வு போன்ற பல்வேறு காரணங்களில் உதவி செயற்பொறியாளர் பதவியில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களில், தெரிவுப்பட்டியலில் உள்ள தகுதியானவர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற கால முறை ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளித்திடவும்,

<u>பொ.து.ந.க.எண்.ஈ1/34261/2008</u>

இ) திரு. எ. குமார், உதவி பொறியாளர், திரு. சி. ரகுபதி, இளநிலை பொறியாளர், மற்றும் திரு. கே. தங்கவேலு, இளநிலை பொறியாளர், ஆகியோர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளின் கோப்பில் அரசின் ஆணை பெற்றவுடன் பணியிடம் வழங்கவும், அரசு தனியர்களுக்கு வழங்கப்பட்ட ஆணைக்கு மாறுபட்டு ஆணை வழங்கும் பட்சத்தில் இம்முன்று நபர்களையும் பதவியிறக்கம் செய்திடவும்,

ஈ) உதவி செயற்பொறியாளர் பதவியில் பணிமூப்பு நிர்ணயம் செய்வது குறித்து நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு பெற்ற பின்னர், தீர்ப்பின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் பதவிஉயர்வில் பணிஉறுதியாக்கம் செய்வது குறித்து அரசுக்கு தக்க பிரேரணையினை அனுப்பவும்

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்